GOKULAM

கோகுலம்




கூடு கட்டும் கலைஞர்கள் பக்.48

ஏப்ரல் 2002

ரூ.6/-



சித்திரை வந்தது; சித்திரபானு பிறந்தது!



ராஜா: ராகுல்! உனக்கு வாழைப் பழத்துக்கும், சீப்புக்கும் உள்ள ஒற்றுமை என்னன்னு தெரியுமாடா?

ராகுல்: தெரியலையேடா... என்ன?

ராஜா: வாழைப்பழம் காலை வாரி விடும். சீப்பு தலையை வாரி விடும்.

- கோ. கார்த்திக், சென்னை - 61.


எத்தனை பறவைகள் பறக்கின்றன?



விடை: 19 பறவைகள்

1) எத்தனை மீன்கள் உள்ளன?


2) புள்ளி உள்ள இடங்களில் வண்ணம் தீட்டி பிராணியின் பெயரைக் கண்டுபிடியுங்கள்?



விடைகள்: 1) 10 மீன்கள் 2) ஆமை







கோகுலம்

மலர் : 20 இதழ் : 3

ஏப்ரல் 2002

கதைகள்:

படக்கதைகள்:

கட்டுரைகள்:


வாசகர்களின் படைப்புகள்:




உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்








பேயைப் பார்த்தேன்!

அரசியல்

வகுப்பில் ஆசிரியர் ஒரு நாள், "வருங் காலத்தில் என்னவாக வர ஆசைப்படுகிறீர் கள்?" என்று கேட்டார். ஒவ்வொருவரும் தங்கள் ஆசைகளைத் தெரிவித்தனர். ஒரு மாணவன் எழுந்து, "நான் பெரியவன் ஆனதும் பெரிய அரசியல் தலைவரா வருவேன் சார்!" என்றான். உடனே ஆசிரியர் அந்த மாண வனை பெஞ்சு மேல் ஏறி நிற்கும்படி கூறினார். அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த மாணவன் ஆசிரியரிடம் ஏன் என்று காரணம் கேட்டான். "நாளைக்கு மேடைமேல ஏற இப்போதே பெஞ்சு மேல் ஏறிப் பழகிக்கொள்" என்று ஆசிரியர் கூறியதும் அனைவரும் சிரித்தோம்.

- எம். ஜரினா பானு,
லெட்சுமாங்குடி.



நெகடிவ் பிளேஸ்

என் வகுப்பில் ஒரு மாணவன் தொடர்ந்து நான்கு நாட்கள் பள்ளிக்கு வரவில்லை. லீவு லெட்டரும் தரவில்லை. ஐந்தாம் நாள் அவன் வந்தபோது ஆசிரியை, "நாலு நாளா ஏன் வரலே?" என்று கேட்டார். "நெகடிவ் பிளேஸுக்குப் போயிருந்தேன் மிஸ்" என அவன் கூற நாங்கள் அனைவரும் சிரித்து விட்டோம். டீச்சர் எங்களைத் திட்டிவிட்டு, அவனிடம் "அது நெகடிவ் பிளேஸ் இல்லே, நேடிவ் பிளேஸ்னு சொல்லணும்'' எனத் திருத்திக் கூறினார்.

- ப. சௌந்தர்யா,
சென்னை.

உப்பு

அன்று எங்களுக்கு வேதியியலில் பயிற்சி செய்முறைத் தேர்வு நடந்து கொண்டிருந்தது. நாங்கள் ஆசிரியர் கொடுக்கும் உப்புகளை என்ன என்று கண்டறிய வேண்டும். தேர்வு முடிந்த பிறகு ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் உப்பின் பெயரையும் கேட்டறிந்தார். லெட்



நைட்ரேட், பொட்டாசியம் சல்பேட் என்று ஒவ்வொருவராகக் கூறினர். ஒரு குறும்புக்கார மாணவன் "தாண்டி உப்பு சார்" என்றான். உடனே அனைவரும் சிரிக்க, ஆசிரியர் அவனை முறைத்தார். உடனே இன்னொரு துடுக்கான மாணவன், "சார் இனிமேல் எங்களுக்கும் ட்ரிபிள் ரீஃபைன்ட் தாண்டி உப்பே கொடுங்க சார். மத்த உப்பெல்லாம் கண்டுபிடிக்க கஷ்டமாயிருக்கு" என்றான். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்.

- எல். சேகர்,
திருச்சி.



கடைசி வரிசை

ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். கடைசியில் சில மாணவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். உடனே "லாஸ்ட் பெஞ்ச் கெட் அவுட்" எனக் கூறினார் கோபத்தோடு ஆசிரியர். கடைசி வரிசையில் அமர்ந்திருந்த மாணவர்கள், 'பெஞ்சை' மட்டும் வெளியே கொண்டு சென்று, வராண்டாவில் வைத்து விட்டு அறைக்குத் திரும்பினார்கள். ஆசிரியர் மீண்டும் கோபத்துடன் "என்ன இது?" என்று கேட்டார். அந்த மாணவர்கள் சிரித்துக் கொண்டே, "நீங்கள் தானே லாஸ்ட் பெஞ்ச், கெட் அவுட் என்று கூறினீர்கள். அதுதான்..." என்றார்கள். இதைக் கேட்டு எல்லா மாணவர்களிடமும் பலத்த சிரிப்பொலி வந்தது. உடனே ஆசிரியர் கடைசி வரிசையில் அமர்ந்திருந்த மாணவர்களையும், அவர்கள் செய்கையைக் கண்டு சிரித்த எங்களையும் கண்டித்துவிட்டு, மீண்டும் பாடத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

- கி. மகிழ்மாறன்,
திருநின்றவூர்.


பேய்!

எங்கள் பள்ளியிலேயே ஹாஸ்டல் இருக்கிறது. ஒரு நாள் வார்டன் எங்களிடம் "பேய்ன்னு ஒண்ணு உலகத்துலேயே கிடையாது, யாராவது சொன்னால் நம்பாதீங்க" என்றார். மறுநாள் இரவு 12 மணிக்கு மேல் நானும் நண்பனும் பாத்ரூம் செல்ல எழுந்தோம். வெளியில் பனி கொட்டியது. ஆளுக்கு ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு நடந்தோம். வார்டன் அறையைக் கடக்கும்போது "யாரு?" என்று குரல் கொடுத்தார். குளிரில் இருவரும் "நாங்கதான்" என்று நடுங்கிக் கொண்டு கூற அவர் 'பேய், பேய்' எனக் கத்தினார். மறுநாள் காலை இன்னொரு வார்டனிடம் "நான் பேய்களைப் பார்த்தேன்" என்று வார்டன் கூற நானும் நண்பனும் சிரித்து விட்டோம்.

- எஸ். அமீர்ஜான்,
பதினோராம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, நல்லூர்.



ரூ. 100/-



— பி. சுசிலா, உடுமலைப்பேட்டை

நகைச்சுவை அரங்கம்!



ரூ. 50/-

ஆசிரியர் : ஒரு பேனாவை 10 ரூபாய் 50 பைசாவுக்கு வாங்கி, 8 ரூபாய் 80 பைசாவுக்கு விற்றால் லாபமா, நஷ்டமா?

மாணவன் : ரூபாயில் நஷ்டம். பைசாவில் லாபம் சார்!

— வி. வேங்கட சுப்ரமணியன், சென்னை.



ஜோக்ஸ் எழுதுங்கள். பரிசுகளை வெல்லுங்கள்!

ரூ. 25/-

— தாரை மா. மகேஷ்ப்ரியன்

ரூ. 15/-

ராமு : தட்டுங்கள் திறக்கப்படும்னு ஏன் சொன்னாங்க தெரியுமா?

சோமு : ஏண்டா?

ராமு : அந்தக் காலத்துல காலிங்பெல் கண்டுபிடிக்கலை, அதான்!

— சு. ஜெயகவிதா, திருத்தங்கல்.




ரூ. 15/-

''சரியாகப் பதில் சொல்லியும் உன்னைத் தமிழ் வாத்தியார் அடிச்சாரா, ஏண்டா?''

''திருவள்ளுவரின் மனைவி பெயர் என்னன்னு கேட்டதுக்கு 'மிஸஸ் திருவள்ளுவர்'னு சொன்னேன்மா''

— சீர்காழி வி. ரேவதி



தங்க வாழைக் கன்று!

மன்னன் குணசீலனுக்கு அருவருப்பு அதிகம். அரண்மனையில் துளி அழுக்கு இருந்தாலும் அந்த இடத்தைச் சுத்தம் செய்பவரை பணி நீக்கம் செய்து விடுவான்! அதேபோல் ஆடையில் அழுக்கு இருந்தால் வண்ணான் வேலை போய் விடும்.

ஒருநாள் அரசரும் அரசியும் சாப்பிடும் போது ஜீரணக் குறைவால் அரசிக்கு வாந்தியும், இருமலும், தும்மலுமாக வர, அந்த இடம் அசிங்கமாகி விட்டது. அரசர் பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்துவிட்டார்.

அதிலிருந்து அந்தப்புரம் சென்று அரசியைப் பார்ப்பதேயில்லை. தனியாக ஒரு அரண்மனையில் தங்கினார். அதோடு வேறு திருமணத்திற்கும் ஏற்பாடு செய்தார்.

அமைச்சர் ஜயதீபர் மிகுந்த புத்தி சாலி. அரசி அவரிடம் தன் குறை நீங்க வழி கண்டுபிடிக்குமாறு வேண்டினாள். அதற்காக தனது வைர அட்டிகையையும் கொடுத்தாள்.

பத்து நாட்கள் சென்றே வந்தார் ஜயதீபர். "இத்தனை நாட்கள் எங்கு போயிருந்தீர்கள்?" என்று விசாரித்தார் அரசர்.

"அரசே, மந்தார மலையில் ஒரு தவயோகி தங்க வாழைப்பழங்கள் விளைவிப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்றேன்" என்பதற்குள் குணசீலர் குறுக்கிட்டு,

"என்ன! தங்க வாழைப் பழங்களா? நிஜமாகவா? பார்த்தீர்களா?" என்று ஆவலாகக் கேட்டார்.

"பார்த்தது மட்டுமா? தங்க வாழைக் கன்றுகளை அரண்மனைத் தோட்டத்தில் நட வாங்கியும் வந்திருக்கிறேன்" என்றபடி பெட்டியிலிருந்து இரண்டு அழகிய தங்க வாழைக்கன்றுகளை எடுத்தார்.

தகதகவென்று வாழைக் கன்றுகள் கண்ணைப் பறித்தன. "இது பெரிதாக குலை தள்ளுமா?" என்று அரசர் சந்தேகத்தோடு கேட்டார். "கண்ணால் பார்த்திராவிட்டால் நானும் நம்பியிருக்க மாட்டேன். ஒவ்வொரு பழமும் ஒரு சாணுக்கு மேலேயே இருக்கும். ஆனால் ஆரோக்கியமற்றவர்கள் நட்டால் முளைக்காது" என்றார் அமைச்சர்.

"நான் ஆரோக்கியமாகத்தானே இருக்கிறேன். நான் நடுகிறேன்" என்றார் வேந்தர்.

"மன்னர் மன்னிக்க வேண்டும். முக்கியமாக சளி, இருமல், வாந்தி பத்து வருடங்களில் வந்திருக்கக்கூடாது. போன வருஷம் சளி, இருமல் வந்து கஷ்டப்பட்டீர்களே!" என்று நினைவுபடுத்தினார் ஜயதீபர்.

"ஆ, ஆமாம். மறந்துவிட்டது. நீங்கள் நடலாமே" என்று மன்னர் சொல்ல, "சரியாப் போச்சு! எனக்குப் போன வாரத்தில் சளி, இருமல், வாந்தி வந்து ரொம்ப அவஸ்தைப்பட்டேன். அது போன பிறகுதான் வாழைக் கன்றை யோகி பெயர்த்துக் கொடுத்தார்" என்றார் மந்திரி.

"பறையறையச் சொல்லலாமா?" என்று அரசர் கேட்க, சந்தோஷமாகச் சம்மதித்தார் அமைச்சர்.

"கடந்த பத்து ஆண்டுகளில் சளி, இருமல், வாந்தி வராதவர்கள் தங்க வாழைக் கன்றை நடவரலாம். பொய் சொல்லி நட்டால் வாழைக்கன்று வளராது. எட்டாவது, ஒன்பதாவது ஆண்டில் வியாதி வந்திருந்தால் மரம் வளரும். குலை தள்ளாது. பொய் சொல்பவர்கள் கடுமையாகத்

தண்டிக்கப்படுவார்கள். வாழை குலை தள்ளும் வரை பாதுகாப்பாக அரண்மனையில்தான் தங்க வேண்டும். குலை தள்ளிய பிறகு அரசர் தகுந்த சன்மானம் அளிப்பார்'' என்று பறையறைந்தனர்.

வாழைக் கன்றை நட எவரும் முன் வரவில்லை! ''அரசே! தாங்கள் நிச்சயித்திருக்கும் அவந்தி நாட்டு இளவரசியை நடச் சொல்லலாமே'' என்றார் அமைச்சர்.

அவளைக் கூப்பிட்டு விசாரித்தபோது அவள் தனக்கு அடிக்கடி ''ஜலதோஷம் பிடிக்கும்!'' என்று கூறினாள்.

''அப்படியானால் அரசருக்கு அடிக்கடி கல்யாணம் நடக்கும். தினமும் கல்யாணச் சாப்பாடுதான்!'' என்றார் ஜயதீபர்.

''ஏன் இப்படி சொல்கிறீர்கள்?'' என்று இளவரசி பயத்தோடு கேட்க,


''எங்கள் பட்டமகிஷி உங்களை விட சௌந்தர்யவதி. சிங்க குட்டி போன்ற இரு இளவரசர்களைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார். ஒருநாள் இருமி, வாந்தியெடுத்ததற்கே அவரை ஒதுக்கி உங்களை மணமுடிக்க தீர்மானித்த அரசரிடம், அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கும் நீங்கள் எத்தனை நாள் தாக்குப் பிடிப்பீர்கள்?'' என்று கேட்டார் ஜயதீபர். இளவரசி திருமணத்தை நிறுத்தும்படி தந்தையிடம் சொன்னாள்.

அரசரும் தன் தவறை உணர்ந்தார். சளி, இருமல், வாந்தியெல்லாம் மனிதருக்கு சகஜம் என்பதைப் புரிய வைத்ததற்காக மந்திரியைப் பாராட்டினார்.

அந்தப்புரம் சென்று அரசியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஜயதீபர் அரசியிடம் வைரமாலையைத் திருப்பிக் கொடுக்க அதை அவருக்கே பரிசாகக் கொடுத்தார் அரசி.

தாமிரத்தில் செய்து தங்க முலாம் பூசப்பட்ட வாழைக்கன்றுகள் என்பது மந்திரி மட்டுமே அறிந்த ரகசியம்.

மாலதி



வியக்க வைக்கும் விளையாட்டு உலகம்

மெரினா கடற்கரை அலைகளின் நடுவிலிருந்து சூரியன் எட்டிப் பார்க்கும் நேரம். மணற்பரப்பு முழுவதும் மாணவர்கள் இளைஞர்களின் ஆக்ரமிப்பு. பல்வேறு விளையாட்டுகள், எங்கும் உற்சாகக் கூச்சல்கள். ஒரு ஓரத்தில் இருபதுக்கும் மேற்பட்ட சிறுவர்கள், பள்ளி மாணவ, மாணவியர் ஆகியோர் கைகளில் சிவப்பு நிற உறை அணிந்து கொண்டு கடுமையான குத்துச் சண்டை பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். அந்தக் காலை நேர சுகமான காற்றிலும், பயிற்சியின் கடுமை காரணமாக வியர்த்து விறுவிறுத்துப் போயிருந்தார்கள் அவர்கள்.

"வெயிட் பாய்ஸ்" என்று பயிற்சியை நிறுத்திவிட்டு "நம்மைத் தேடி ஒரு கெஸ்ட் இன்று வந்திருக்கிறார். அவருக்கு உங்களை அறிமுகப்படுத்துகிறேன்" என்று எல்லோருக்கும் நம்மை அறிமுகப்படுத்தியவர் பயிற்சியாளர் ஏ.கே. கருணாகரன். தெற்கு ரயில்வேயில் வேலை செய்யும் கருணாகரன் குத்துச் சண்டை வீரர். தமிழ்நாடு அமெச்சூர் பாக்ஸிங் சங்கச் செயலாளர். பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தவர்களில் தேசிய அளவில் சாம்பியன் பட்டம் வாங்கியவர்களும் இருந்தார்கள். கல்லூரி மாணவியரும் ஆர்வத்துடன் குத்துச் சண்டை பயிற்சிக்கு வருகிறார்கள்.

"ரொம்ப ஆபத்தான விளையாட்டு ஆயிற்றே. இளம் பெண்களும் தைரியமாக வருகிறார்களே" என்று ஆச்சர்யத்தைத் தெரிவித்த போது "நீங்கள் நினைப்பதுபோல இது அப்படி ஒன்றும் ஆபத்தான விளையாட்டல்ல" என்றார் கருணாகரன்.

"உலக அளவில் ரொம்பவும் ஆபத்தான விளையாட்டுகளை வரிசைப்படுத்தியிருக்கிறார்கள். அதில் ஐஸ் ஹாக்கிக்கு முதல் இடம். அடுத்து மோட்டார் பந்தயங்கள். மூன்றாவதாக ரக்பி, நான்காவதாக வருவதுதான் குத்துச் சண்டை. குத்துச் சண்டை என்றால் எதிராளியைச் சகட்டு மேனிக்கு எங்கு வேண்டுமானாலும் 'பச்சக்.. பச்சக்'கென்று குத்தலாம் என்று கருத வேண்டாம். பாக்ஸிங் விதிகளின்படி மேலே தலைப்பகுதியில் நெற்றியிலிருந்து. கீழே தொப்புள் வரை உள்ள பகுதிகளில் தான் பன்ச் செய்ய வேண்டும். பயிற்சியில் முதலில் சொல்லித் தருவது எதிராளியின் தாக்குதலிலிருந்து தப்பிப்பது குறித்துதான். அதன் பின்னர்தான் எதிர் தாக்குதல் செய்ய பயிற்சி தருவோம்" என்று சொல்கிறார் கருணாகரன்.





* கருணாகரன்

இன்று உலகம் முழுக்க சிறுவர்களைக் கவருவது தொலைக்காட்சியில் வரும் WWF என்ற மல்யுத்தப் போட்டிகள். "மல்யுத்தமும், குத்துச் சண்டையும் சகோதர விளையாட்டுகள்தானா?"

"WWF பற்றி அதிகம் பேச வேண்டாம். அது மல்யுத்தம் என்றாலும் விதிகளைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் பொழுது போக்கையே நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுவது. ஆனால் விதிகளின்படி ஆடப்படும் மல்யுத்தத்துக்கும், குத்துச் சண்டைக்கும் வித்தியாசம் உண்டு. மல்யுத்தத்தில் வீரர்கள் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு கீழே தள்ளுவதும், புரளுவதும் நடக்கும். தலைக்கவசம் போட்டுக் கொள்ள மாட்டார்கள். கைகளில் உறை கிடையாது. ஆனால் தலைக்கவசம்,





குத்துச் சண்டை

கை உறை எல்லாம் குத்துச் சண்டையில் உண்டு. இங்கு வீரர்களின் கைகளுக்குத் தான் வேலை.''

குத்துச் சண்டை மேடை என்பது இருபதுக்கு இருபது அடி சதுரத்தில் இருக்கும். ஆட்கள் விளையாட்டு கவனத்தில் கீழே விழுந்து விடாமல் இருக்க சுற்றி பிளாஸ்டிக் கயிறுகள் கட்டப்பட்டிருக்கும். அந்தச் சதுர மேடையில் நேர் குறுக்கான இரண்டு மூலைகள் ப்ளூ கார்னர் மற்றும் ரெட் கார்னர் என்று அழைக்கப்படுகின்றன. உலகில் எந்த இடத்தில் குத்துச் சண்டை போட்டி நடந்தாலும் போட்டியிடும் இரண்டு வீரர்களில் ஒருவர் நீல வண்ண தலைக் கவசம், பனியன், கையுறை என்று அணிந்து கொண்டிருப்பார். மற்றவர் இவற்றைச் சிவப்பு வண்ணத்தில் அணிந்திருப்பார். இந்த இரண்டு வீரர்களும் ப்ளூ கார்னர் மற்றும் ரெட் கார்னர் பகுதியிலிருந்து நடு மேடைக்கு வந்து மோதுவார்கள். ஆட்டம் நடந்து கொண்டிருக்கும்போது அறிவிப்பாளர் ஆட்டக்காரர்களின் பெயரைக் கூடச் சொல்லாமல் ரெட் கார்னர், ப்ளூ கார்னர் என்று தான் குறிப்பிடுவார்.

மேடையில் மற்ற இரு நேர் குறுக்கான மூலைகள் ஒயிட் கார்னர் என்று அழைக்கப்படுகின்றன. ஒரு ஒயிட் கார்னரில் டாக்டர்கள் இருப்பார்கள். மேடையின் மேல் ஒரு நடுவர் இருப்பார். மேடையைச் சுற்றி கீழே ஐந்து துணை நடுவர்கள் இருப்பார்கள். இவர்களைத் தவிர, பிரச்னைக்குரிய விஷயங்களில் சந்தேகமற தீர்ப்புச்சொல்ல, மேடையை ஒட்டி மேலும் மூன்று நடுவர்கள் இருப்பார்கள். இவர்களை Jury என்கிறார்கள். Juryகளுக்கும் ஆட்ட மேடைக்கு நடுவிலும் அறிவிப்பாளர், டைம் கீப்பர் ஆகியோர் இருப்பார்கள். எனவே ஒரு குத்துச் சண்டை போட்டி நடப்பதென்றால் இத்தனை உதவிக் கரங்கள் தேவை. ஒரு போட்டி என்பது, இரண்டிரண்டு நிமிடமாக நான்கு ரவுண்ட்ஸ் நடக்கும். ஒவ்வொரு ரவுண்ட் இடையிலும் ஒரு நிமிடம் ஓய்வு உண்டு. ஒவ்வொரு சரியான தாக்குதலுக்கும் பாயிண்ட்

உண்டு. அதிக பன்ச் கொடுத்தவருக்கு, பாயிண்ட் கணக்கில் ஸ்கோர் கொடுக்கப்பட்டு, இருபது பாயிண்ட் பெற்றவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

குத்துச் சண்டையில் கன்னங்களில் தாக்குவதற்கு வீரர்கள் ஒருவருக்கொருவர் முயன்றாலும், வயிற்றுப் பகுதியில், தாக்கப்படுவது ஒருவருக்கு, பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்துமாம். போட்டியின்போது வீரர்கள் குதித்துக் கொண்டே, தலையை இப்படியும் அப்படியுமாகச் சாய்த்துக் கொள்வது எதிராளியை குழப்பத்தானாம்.

குத்துச் சண்டைப் போட்டிகள் துவங்கியது இங்கிலாந்தில்தான். அதுவும் பதினெட்டாம் நூற்றாண்டில். மன்னர் முன் உடல் வலிமையைக் காட்டக் கூடிய வீர விளையாட்டாகத் துவங்கிய மல்யுத்தத்தின் திருத்தப்பட்ட மற்றொரு வடிவமாகக் குத்துச் சண்டையைச் சொல்லலாம். நமது நாட்டில் மேற்கு வங்கத்தில்தான் முதலில் துவங்கினார்கள். சென்னையில் ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரியில் 1932லேயே மேடை அமைத்து சொல்லிக் கொடுத்தவர் ஹாரி குரோயக் என்பவர். இன்று சென்னையில் எண்பதுக்கும் மேற்பட்ட குத்துச் சண்டை கிளப்புகள் இருக்கின்றன. தேசிய அளவில் டிங்கோ சிங், குரு சரண்சிங் போன்று சிறந்த வீரர்கள் இருந்தாலும் தமிழகத்தைச் சேர்ந்த பாக்யராஜன், முனுசாமி வேலு, அருள்தாஸ், மனோகரன், தேவராஜன் ஆகியோரும் உலக அளவிலும், தேசிய அளவிலும் பளிச்சிட்டிருக்கிறார்கள்.

கியூபாவில் குத்துச் சண்டை என்பது ஒரு தேசிய விளையாட்டு. அங்கு ஒவ்வொரு பள்ளியிலும், பாக்ஸிங் பயிற்சி உண்டு. அடுத்து அமெரிக்கா குத்துச் சண்டையில் முன்னணியில் நிற்கிறது. "ஆசியப் போட்டிகளிலும், ஒலிம்பிக்ஸிலும் அதிக அளவில் பதக்கங்களைக் குவிக்க வேண்டுமென்றால் பாக்ஸிங், எடை தூக்குதல் ஆகியவற்றில் நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக பாக்ஸிங்கில் 12 பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. எனவே நல்ல குத்துச் சண்டை வீரர்களை உருவாக்கினால் நிறைய பதக்கங்களைத் தட்டி வரலாம்" என்கிறார் கருணாகரன். அதற்கு என்னதான் செய்ய வேண்டும்?

"சமுதாயத்தில் நடுத்தர மற்றும் நலிந்த பிரிவிலிருந்து பலர் குத்துச் சண்டை பயிற்சி பெற ஆர்வமுடன் வருகிறார்கள். ஆனால் கையுறை, தலைக் கவசம் போன்றவற்றின் விலை மிக அதிகமாக இருக்கிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு இலவசமாக இவற்றைக் கொடுக்கலாம். பயிற்சியின் போது நல்ல சத்து பானங்கள், முட்டை ஆகியவையும் கொடுக்க ஏற்பாடு செய்யலாம்."

"தரமான பயிற்சி களம் நேரு ஸ்டேடியத்தில் இருக்கிறது. மாவட்ட மையங்களில் மேலும் பல களங்களை உருவாக்கலாம். இந்த விளையாட்டில் பள்ளி மாணவ, மாணவியருக்குப் புதிய ஆர்வம் ஏற்பட்டுள்ளதைப் பார்க்க முடிகிறது. இதை அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உதவி செய்ய நாங்கள் இருக்கிறோம்" என்கிறார் கருணாகரன்.

கட்டுரை, படங்கள் : ப்ரியன்

சிவப்பு நிறம்

மேலை நாடுகளில் காளையுடன் சண்டை போடும்போது காளையின் முன்பு சிவப்பு நிறத் துணியைக் காட்டி மாட்டை அலைக்கழித்து விளையாடுவார்கள்.



மாட்டுக்குச் சிவப்பு நிறம் கண்டால் மிரட்சி என்று எண்ண வேண்டாம். உண்மையிலேயே மாடு நிறக்குருடுதான். தனது தலைக்கு மேலாக அசைக்கப்படும் குடை அல்லது துணியை வானத்தின் பின்னணியில் கண்டு மிரட்சி அடைகிறது!

- தங்கவயல் பழனி, சென்னை - 59

ஆஸ்கருக்குள் நுழைந்த முதல் இந்தியத் திரைப்படம்!



'ஆஸ்கர் விருது' என்பதை எல்லோரும் கேள்விப்பட்டிருப்போம். சினிமாத் துறையில் உலக அளவில் மிகவும் உயர்ந்த விருதாகக் கருதப்படுகிறது ஆஸ்கர் விருது.

'அகாடமி ஆஃப் மோஷன் பிக்சர் அண்ட் சயின்ஸ்' என்ற அமைப்பு 1929 ஆம் ஆண்டு முதல் ஆஸ்கர் விருதுகளை வழங்கி வருகிறது.

முதன் முதலில் 1929 மே 16ந் தேதி விருது வழங்கப்பட்டபோது அவ்விருதின் பெயர் 'அகாடமி விருது'. அகாடமி விருது என்பது நாளடைவில் 'ஆஸ்கர் விருது' என்று வழங்கப்பட்டுவிட்டது.

ஹாலிவுட்டில் கலை இயக்குனராகப் பணிபுரிந்த செட்ரிக் ஜிப்பான்ஸ் என்பவர் தன் மேஜை விரிப்பில் ஒரு உருவத்தை வரைந்திருந்தார். அந்த உருவம் ஆஸ்கர் அமைப்புக்குப் பிடித்துப் போனது. அதையே சிலையாகச் செய்துவிட முடிவெடுத்தனர். ஜார்ஜ் ஸ்டேன்லி என்பவர் ஜிப்பான்ஸ் வரைந்த உருவத்தைச் சிலையாகச் செய்தார். இன்றுவரை அந்தச் சிலைதான் ஆஸ்கரின் சின்னமாக வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 25ந் தேதி திரைப்படத் துறையில் 24 பிரிவுகளுக்கு ஆஸ்கர் விருது வழங்கப்படுகிறது. அன்றுதான் யாருக்கு விருது என்கிற அறிவிப்பு வரும். அப்பொழுதே விருதும் வழங்கப்படும்.

ஆஸ்கர் விருது பிளாஸ்டரில் தயாரித்து அதன் மேல் தங்க முலாம் பூசப்படுகிறது.

சிலையின் உயரம் 13½ இன்ச், 8½ பவுண்ட். அதிக ஆஸ்கர் விருதுகளைத் தட்டிச் சென்ற படம் டைட்டானிக்.

உலக அளவில் திரைப்படத்துறையில் அரிய சாதனை படைத்தவர்களுக்குக் கௌரவ ஆஸ்கர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்தியத் திரைப்படத் துறையில் ஒப்பற்றவர் என்று போற்றப்படும் சத்யஜித்ரேக்கு கௌரவ ஆஸ்கர் விருது வழங்கப்பட்டது.

இதைத் தவிர இந்தியத் திரைப்படத்துக்கோ, கலைஞர்களுக்கோ ஆஸ்கர் விருது வழங்கப்படவில்லை. இந்த ஆண்டு ஆஸ்கருக்கு 'லகான்' என்ற இந்தி திரைப்படம் முதல் முறையாக இறுதிச் சுற்றுவரை சென்றிருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை இது சரித்திர சாதனையாகக் கருதப்படுகிறது.


அநியாயமாக வரி விதிக்கும் ஆங்கிலேயரிடம் நியாயம் கேட்கப் போகிறார் நாயகன் அமீர்கான். அவர்களின் விளையாட்டான கிரிக்கெட்டை விளையாடி அவர்களைத் தோற்கடித்தால் வரி கிடையாது என சவால் விடுகின்றனர் ஆங்கிலேயர்கள். கிரிக்கெட் என்ற பெயரைக் கூடக் கேள்விப்படாதவர்கள் அவர்களுடன் மோதி, ஜெயித்து, ஊரை மீட்பதுதான் கதை. பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை அனைவராலும் பாராட்டப்பட்ட படம் லகான். இதன் நாயகனும் தயாரிப்பாளரும் அமீர்கான். இயக்குனர் அஷுதோஷ் கோவாரிகர்.

லகான் படம் ஆஸ்கர் விருது வாங்கினாலும் வாங்காவிட்டாலும் இது பெரிய சாதனைதான்! உங்களுக்காக லகான் போஸ்டர் 40ஆம் பக்கத்தில்.




தங்கமனசு

கதை : இரா.ராதிகா, ஒன்பதாம் வகுப்பு
பாலவிஹார் பெ.மே.நி.பள்ளி, பண்ருட்டி.





அன்றிரவு பலத்த மழை.
மறுநாள்—
ஐயோ!... மழைக்கு என் வீடு ஒழுகி பஞ்செல்லாம் நனைஞ்சு போச்சே!
நான் என் பணத்தை யெல்லாம் வட்டிக்கு விட்டிருக்கேன். ஏகப் பட்ட வட்டிப் பணம் வரப் போகுது!
முன்னப்ப சொன்னேனே.. கேட்டியா?
பொன்னன் கவலையோடு சாமியாரிடம் சென்றான்—
பொன்னா, நீ குறுக்கு வழியில் போகவில்லை... உன் நல்ல குணம் உன்னைக் கைவிடாது. உன் வயலில் மீண்டும் உன் கடின உழைப்பைக் காட்டு. உன் கஷ்டம் தீரும்.
வரும் வழியில்...
...நம் மன்னரின் நீண்டநாள் நோய்க்கு மருந்து கொடுத்துத் தீர்த்து வைப்பவருக்கு 1000 பொன் பரிசு வழங்கப்படும். இது அரசியார் அறிவிப்பு....!
என் பிரச்சனை ஒரு பக்கம் இருக்கட்டும்... மன்னர் நோயை எப்படி தீர்ப்பது?



பொன்னன் வயலில் உழுது கொண்டிருந்தபோது ஒரு செப்புத்தகட்டைக் கண்டெடுத்தான். அதில்...
..அட!..மன்னரின் நோய்க்கேற்ற மருந்து எழுதப் பட்டிருக்கே!
நம் மன்னரைக் காப்பாற்ற ஒரு வழி பிறந்துவிட்டது!
இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் அரண் மனையில்—
பொன்னா! நீ கொடுத்த மருந்தால் மன்னர் பிழைத்து விட்டார். எழுந்து பேசிச் சிரித்து மகிழ்ச்சியாக இருக்கிறார். இதோ...
..நாங்கள் அறிவித்ததற்குமேல் — 5000 பொன். அரண் மனையில் வேலையும் நல்ல சம்பளமும் தருகிறோம். நீ உன் நிலத்தையும் பார்த்துக்கொள்ளலாம்.
நன்றி அரசியாரே!


பிறகு...
என்ன பொன்னா நலமா?
குருவியூர் சாமியார் தயவால் நலமாயிருக்கேன். நீ நலம்தானே வேலா?
என் நிலைமை மிக மோச மாகிப் போச்சு பொன்னா!
ஏன், என்னாச்சு?
..நான் ஊருக்கு வழியில் போனேன். என் நிலமும் போச்சு, பணமும் போச்சு. வட்டியும் வரலை, முதலும் திரும்பி வரலை! உன் நல்ல மனசுக்கு நீ நல்லா இருப்பே!

மரமும் மனிதனும்!



ஓர் அறிவே பெற்ற தெனச்
சொல்லும் மரங்கள் - நமக்கு
உதவு கின்ற முறைகளை நாம்
எண்ணி முடியுமா?

நிழல் தரும், காய் தரும்
கனிகளும் தரும் - பின்
மழை மிகப் பொழி வதற்கு
உதவி செய்யும்.

ஆறு அறிவு பெற்ற வராய்
அகந்தை கொள்ளும் நாம்
அறிந்து விரும்பி மற்ற வர்க்கு
என்ன செய்கிறோம்?

சாக் கடையை உண்டு வளர்ந்த
மா மரங்களே - இங்கு
சர்க் கரையாய் இனிக்கும் சுவைப்
பழங்கள் வழங்க...

அம்மா பாலை உண்டு வளர்ந்த
மனிதப் பிறவி நாம் - உயிர்
அத்த னைக்கும் உதவி செய்யத்
துடிக்க வேண்டாமா?

- ரா. பொன்ராசன்

அருப்புக்கோட்டை செல்வம்

மீண்டும் துளிர்க்கும்!

தெய்வமணி எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். எதிலுமே அவன் முதல் மாணவனாய்த் திகழ்ந்தான். படிப்பதில் எத்தனை ஆர்வமோ அதனிலும் மேலாய் ஓவியம் வரைவதில் இருந்தது.

சிறுவயதிலிருந்தே எதையாவது வரைவான். எழுதத் தொடங்கியபோதே, அவன் அம்மாவிடம் "யானை வரைஞ்சு காட்டுங்கம்மா... மயில் வரைஞ்சு காட்டுங்கம்மா" என்பான்.

அவன் அம்மாவுக்கு ஓவியம் வரைய நன்கு தெரியும். ஆதலால்... அவன் கேட்ட அனைத்தையும் வரைந்து காண்பிப்பாள். அப்போதே குச்சியை வைத்துக் கொண்டு, பூக்கள், பொம்மை என்று வரைவான். அது இன்று சிறந்த ஓவியனாகக் காட்டி விட்டது.

ஓவியத்துக்கென்று ஒரு அழகான நோட்டுப் போட்டிருந்தான். எந்தவொரு ஆசானுமே இல்லாமல், தானே தனது சொந்த முயற்சியால் அதைத் தயாரித்திருந்தான்.

எந்த நேரமும் யாராக இருந்தாலும் அதைப் பார்த்து கற்றுக் கொள்ளக்கூடிய இலக்கண அமைப்புகள், ஓவியத்திற்கான அடிப்படை யுக்திகள். எல்லாமே அந்த நோட்டில் பதித்திருந்தான்.


அவனுடைய ஆசிரியர்களும் அவன் மீது மிகவும் அன்பு காட்டுவார்கள். பள்ளியில் ஆண்டு விழா, எந்த ஒரு விசேஷம் என்றாலும், அந்தப் பள்ளியை அலங்கரிப்பது. தெய்வமணியின் கைவண்ணம் தான்.

ஆனால்... அவனது பெருமைகளையெல்லாம் பிடிக்காமல் இருந்தான் அவனோடு படிக்கும் மாணவன் பூபதி.

பூபதியும் அவன் போல், ஓவியம் வரையக் கற்றுக் கொள்ள முயன்றான். என்னதான் முயற்சி செய்தாலும் அவனுக்கு முழு வெற்றி கிடைக்கவில்லை. அவனது ஓவியத்துக்கு அத்தனை மரியாதை இல்லை.

அதனால் தான் தெய்வமணியை அவன் வெறுத்தான்.

தனக்கென்று சில நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு தெய்வமணி எதைச் செய்தாலும், அதை அடுத்தவர்களிடம் சொல்லி கேலி செய்வான்.



ஆனால்... தெய்வமணி ஒரு நாளும் அவன் மீது கோபமோ, பொறாமையோ பட்டதே இல்லை. அன்று பள்ளியில் ஓவிய நோட்டை தனது பெஞ்சு மேலேயே மறந்து வைத்து விட்டுப் போய்விட்டான் தெய்வ மணி.

திடீரென்று இரவு மழை. நன்றாகப் பெய்தது. மழை பெய்தால் அந்த வகுப்பு முழுவதும் தண்ணீர் நிரம்பி விடும். மறுநாள் காலை வகுப்புக்கு முதல் மாண வனாக வந்த பூபதிக்கு அந்த ஓவிய நோட்டு கண்ணில் பட்டது. உடனே நோட்டை தண்ணீருக்குள் தள்ளி விட் டான்.

வெகு நேரம் கழித்துதான் தெய்வமணி வந்தான். வந்தவுடன் அந்தப் நோட்டைத் தான் தேடினான். அது மழை நீரில் ஊறிப் போய் இருப்பதைப் பார்த்ததும் அப்படியே துடித்துப் போய்விட்டான். எந்த ஒரு பக்கமும் தெளிவாய் இல்லை. காய வைத் துப் பார்த்தான். அதிலும் பயன் இல்லை.

மிகவும் நொந்து போய்விட்டான். இத்தனை வருட உழைப்பு வீண் போய் விட்டதே என்று வேதனைப்பட்டான்.

பூபதி தன் நண்பர்களிடம் பெருமை யாக இந்த விஷயத்தைப் பேசிக் கொண் டிருந்தபோது தற்செயலாக ராமு கேட்டு விட்டான். உடனே தெய்வமணியிடம் கூறி னான்.

அதற்காக அவனிடம் சென்று சண்டை யிட அவன் மனம் ஒப்பவில்லை. போனால் போகட்டும் என்று சும்மா இருந்து விடவும் முடியாமல் வேதனையில் தவித்தான். ஒருநாள் ராமு ''என்னடா தெய்வமணி இன்னும் ஏண்டா அதையே நெனச்சுக்கிட்டு இருக்கே?'' என்று கேட்டான்.

''ப்ச்... அதெல்லாம் ஒண்ணுமில்லேடா... அதை நெனைச்சு வருத்தப்பட்டு என்ன ஆகப் போகுது?'' - என்று சலித்துக் கொண்டே சொன்னான் தெய்வமணி.


''நீ சொல்லத்தான் செய்யறே... ஆனால் உன் மனசுல அந்த வேதனை இருக்கத் தான் செய்யுது. சரி... நம்ம மாவட்ட அள வுல நடந்த ஓவியப் போட்டிக்கு நீ தேர்ந் தெடுக்கப்பட்டிருந்தியே... இப்ப போகலைன்னு உங்கம்மா சொன்னாங்களே... உண்மையா?'' என்று கேட்டான் ராமு.

''ஆமாண்டா, எனக்கு விருப்பம் இல்லை.''

''இங்கே பாரு, உன்கிட்ட எவ்வளவு திறமை இருக்கு. ஏன் இப்படி கோழையா இருக்கே. நீ போனா நிச்சயம் வெற்றி பெற முடியும். இல்லாத ஒண்ணை நினைச்சு வருத்தப்பட்டுக்கிட்டே இருக்கக்கூடாது. நீ கண்டிப்பா போட்டிக்குப் போறே.''

''ம்... சரி... பார்க்கலாம்'' என்று மட்டும் சொன்னான் தெய்வமணி.

இருவரும் தோட்டத்துப் பக்கம் வந் தனர். ஒரு செடியின் நுனிப்பகுதியைக் கிள்ளி எறிந்தான் தெய்வமணி. அதன்பின் சிறிது நேரம் பேசிவிட்டு சென்று விட்டான்



- *நீர் மூழ்கிக் கப்பல்களால் நகர்ந்தால்தான் மிதக்க முடியும். நின்றால் மூழ்கி விடும்.*
- *கரப்பான் பூச்சியின் இரத்தம் வெள்ளை நிறம்.*
- *வெண்தங்கம் என்பது பிளாட்டினம்.*
- *ஒரு மனிதன் தன் வாழ்நாளின் சுமார் 23 வருஷம் தூங்குகிறான்.*
- *மருத்துவ உலகின் தந்தை ஹிப்பாக்ரட்டீஸ்.*
- *சோமாலியாவில் 1968இல் உலக சாதனை உண்டாக்கிய கறையான் புற்றின் உயரம் 3.7 மீட்டர்.*

— இரா. விக்னிஷா, எட்டாம் வகுப்பு,
அரசு மகளிர் உ.நி.பள்ளி, ஏரல், தூத்துக்குடி.

ராமு.

அன்று ஞாயிற்றுக்கிழமை. இந்த ஒரு வாரத்தில் அந்த ஓவியப் போட்டிக்குச் செல்வது பற்றி எந்த ஒரு சிந்தனையுமே இல்லாமல் இருந்தான் தெய்வமணி.

நாளை போட்டி.

''என்ன தெய்வமணி. நாளைக்குப் போட்டிக்கு எத்தனை மணிக்குப் போறே?''



என்று கேட்டான் ராமு.

''பார்க்கலாம்... ஏன் அதையே பேசறே? வேற ஏதாவது பேசு. இன்னைக்குப் பாடம் படிச்சாச்சா...?''

''இங்கே பாரு. இந்தச் சமாளிப் பெல்லாம் வேண்டாம். நாளைக்கு நாம ரெண்டு பேரும் போறோம். என்ன சொல்ற...?'' பேசிக்கொண்டே, இருவரும் நடந்து வீட்டின் பின்னே அந்தத் தோட்டத்தின் பக்கம் வந்தனர்.

அங்கே ராமுவின் பார்வையில் அந்தச் செடி பட்டது.

''தெய்வமணி, அதோ பார்த்தியா... போன வாரம் அந்தச் செடியோட நுனிப் பகுதியைக் கிள்ளி எறிஞ்சியே... இன்னைக்குப் பார்த்தியா... அதே இடத்துல இருந்து இரண்டு பிரிவா பிரிஞ்சு தன்னோட வளர்ச்சியை அதிகப்படுத்தியிருக்கு. இதே மாதிரிதாண்டா, உன்னோட அந்த ஓவியப் புத்தகம் ஒரு செடியோட நுனிப்பகுதி. அதை அந்தப் பூபதி கிள்ளி எறிஞ்சுட்டான். இப்பத்தாண்டா உனக்குள்ள வேகம் வரணும், விவேகம் வரணும். செடி தன் இரண்டு பக்கம் துளிர்த்தது மாதிரி உனக்குள்ள புதிய உணர்வுகள் துளிர்க்கணும்'' என்று ஆவேசமாகச் சொன்னான் ராமு.

ராமு சுட்டிக் காட்டிய அந்தச் செடியை உற்றுப் பார்த்தான் தெய்வமணி.

''ராமு... நான் இப்பவே தயாராகறேன். நாளைக்குக் காலையில நாம போட்டிக்குப் போறோம்...'' என்றான் தெய்வமணி.



வைரக்கல் ஒளியாலே வையகமே தெரியும் - அது என்ன?

I. 1. எல்லோருக்கும் கிடைக்காத மதி. எல்லோரும் விரும்பும் மதி - அது என்ன மதி?

2. ஒரு சாண் கட்டைக்கு அரைச் சாண் மூடி - அது என்ன?

3. உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன் - அவன் யார்?

4. ஒரு பெண்ணுக்கு மூணு கொண்டை - அது என்ன?

5. நீலநிற மேடையிலே கோடி மலர் காயுது - அது என்ன?

6. ஓட்டம் நின்றால் போதும். ஆட்டம் நின்று போகும் - எது என்ன?

- எம்.ஜி.சத்யா, பதினோராம் வகுப்பு, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆண்டிபட்டி.

II. 1. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது - அது என்ன?

2. சாட்டையால் அடித்தது, சத்தமிட்டு ஓடியது, அழுதபடி ஆடியது! - அது என்ன?

3. வட்ட வடிவழகி, தண்ணீரில் வாழும் அழகி, வாடி வதங்கினாலும் வந்திடுவாள் பந்திக்கு - அவள் யார்?

4. செய்ததைச் செய்யும் குரங்கும் அல்ல. சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல! - அது என்ன?

5. செம்பட்டு உடையழகி தலைகீழே குடை பிடிப்பாள்! - அவள் யார்?

6. மூடிய குகைக்குள்ளே செம்பவள முத்துகள் - அது என்ன?

- தி.செ.அறிவழகன், உத்திரமேரூர்.

III. 1. தவழும்போது ஒரு பெயர், விழும்போது ஒரு பெயர், உருளும்போது ஒரு பெயர் - அது என்ன?

2. பூட்டில்லா பெட்டிக்குள் போட்டிருக்கும் வைரக்கல்; வைரக்கல் ஒளியாலே வையகமே தெரியும் - அது என்ன?

3. குண்டு விழி ராஜாவுக்கு உடம்பெல்லாம் பல் அது என்ன?

4. கையில் தவழும் பையில் உறங்கும் - அது என்ன?

- சீ.கி.இராஜராஜேஸ்வரி, ஒன்பதாம் வகுப்பு, நாடார் சரஸ்வதி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தேனி

IV. 1. செடியில் பூக்காத பூ. வண்ணமே இல்லாத பூ. கண்ணால் பார்க்க முடியாத பூ. இருமனம் சேரும்போது உண்டாகும் பூ - அது என்ன பூ?

2. என்னைப் படித்தும் பெறலாம்; காற்றிலும் பறக்க விடலாம் - நான் யார்?

3. சிவப்பு ஆடைக்குள் கலகலக்கும் முத்துகள் - அது என்ன?

4. நான் தீயில் எரிந்து வெந்த பிறகு தான் அதிக சக்தியைப் பெறுவேன் - நான் யார்?

5. கூ... என்று குரலிடுவேன் நான் குயிலல்ல. மானிடர்களைச் சுமப்பேன் நான் பூமியல்ல. என் வழியில் மட்டும் செல்வேன் - நான் யார்?

- எஸ்.அமீர்ஜான், பதினோராம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, திருவண்ணாமலை.


விடைகள் :

I. 1.நிம்மதி, 2. பேனா, 3.எறும்பு, 4.அடுப்பு, 5. விண்மீன்கள், 6. ரத்தம்

II. 1. எலுமிச்சம்பழம், 2. மின்னல் - இடி-மழை, 3. தாமரை, 4. கண்ணாடி, 5. மிளகாய், 6. மாதுளம்பழம்

III. 1.மேகம், மழை, நீர், 2. கண், 3. மாதுளம்பழம், 4. பணம்

IV. 1. அன்பு, 2. பட்டம், 3. காய்ந்த மிளகாய், 4. செங்கல், 5. ரயில்



I ரகு திங்கட்கிழமை வேலைக்குப் போனான். அவனுக்கு மிகக் குறைந்த கூலி கிடைத்தது. செவ்வாய்க்கிழமை வேலைக்குப் போனான். திங்களன்று கிடைத்த கூலியை விட ஆறு ரூபாய் அதிகம் கிடைத்தது. புதன் கிழமை வேலைக்குப் போனான். செவ்வாய்க் கிழமை கிடைத்த கூலியைவிட ஆறு ரூபாய் அதிகமாகக் கிடைத்தது. வியாழக்கிழமை வேலைக்குப் போனான். புதனன்று கிடைத்த கூலியைக் காட்டிலும் ஆறு ரூபாய் கூடக் கிடைத்தது. வெள்ளிக்கிழமை வேலைக்குப் போனான். அன்றும் வியாழனில் கிடைத்த கூலியைவிட ஆறு ரூபாய் அதிகம் கிடைத்தது. சனிக்கிழமை ரகு வேலைக்குப் போகவில்லை. அன்று வீட்டில் உட்கார்ந்து திங்கள் முதல் வெள்ளி வரை தனக்குக் கிடைத்த கூலி முழுவதையும் எண்ணிப் பார்த்தான். சரியாக நூறு ரூபாய் இருந்தது. ரகு ஒவ்வொரு நாளும் வாங்கின கூலி எவ்வளவு?

- ஜி. பிரணவ், கோலியனூர்.

II(a) *இரண்டு அப்பாக்கள், இரண்டு பையன்கள், மூன்று தர்பூசணிகளை வாங்கினார்கள். ஆனால் வீடு திரும்பியபோது ஆளுக்கொன்று எடுத்துச் சென்றார்கள். எப்படி?*

II(b) ஒரு சினிமாவுக்கு நண்பன் ஒருவனை ஒரே படத்திற்கு இரு முறை அழைத்துச் செல்கிறீர்கள். அல்லது இரண்டு நண்பர்களை ஒரே நேரத்தில் ஒரு படத்திற்கு அழைத்துச் செல்கிறீர்கள். இதில் எது செலவு குறைவு உங்களுக்கு?

- எம். ஜரினா பேகம்

குடும்பத்தினரின் வயது என்ன?

III ஊரிலிருந்து வந்த மாமா ஒருவர் "உன் தங்கை வயது என்ன ராமு?" என்று கேட்டார். உடனே என் அப்பா "நான் சொல்கிறேன். கண்டுபிடி" என்றார். "ராமுவின் வயதைத் திருப்பிப் போட்டால் அவன் அம்மா வயது வரும். ராமுவின் வயதில் பாதி சேர்த்து அவன் அம்மாவின் வயதுடன் கூட்டினால் என் வயசு வரும். ராமு வயசும் அவன் அம்மா வயசும் சேர்த்து அதில் என் வயதைக் குறைத்தால் அவன் தங்கை வயசு வரும். கண்டுபிடியுங்கள்" என்றார். கண்டுபிடிச்சிட்டீங்களா?

- ஜனனி, திருவனந்தபுரம்.

IV 1) தாவரங்களின் முக்கிய நிறமி ____

2) தருமரிலிருந்து சகாதேவன் வரை ____ அழைக்கப்பட்டனர்.

3) கோகுல கிருஷ்ணனையும், பலராமனையும் கொன்று விடுவதற்காக கம்சனால் அனுப்பப்பட்டவர் ____

4) இந்தியாவில் மாபெரும் முதல் நிலநடுக்கம் நடைபெற்ற இடம் ____

5) பறவையினங்களிலேயே நீரை உறிஞ்சிக் குடிப்பது ____

6) தூக்கிலிடப்பட்ட பாகிஸ்தான் பிரதமர் ____

7) நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு 'சிவாஜி' என்ற பட்டத்தை அளித்தவர் ____

8) இதயத்துடிப்பை முறைபடுத்துவதற்கு பயன்படும் கருவி ____

9) மகா அக்பரின் பாதுகாவலராக விளங்கியவர் ____

10) தற்கால பரத நாட்டியத்தை வடிவமைத்தவர் ____

11) விஷவாயு தாக்கி பேரிழப்பு ஏற்பட்ட இடம் ____

12) சந்திரகிரஹணம் நிகழும் நாள் ____

- சிவ. மணவழகி, மயிலாடுதுறை.

விடை 58 ஆம் பக்கம்

சர்க்கஸ்



சர்க்கஸ் என்ற சொல்லுக்கு கிரேக்க, லத்தீன் மொழிகளில் வட்டம் அல்லது வளையம் என்று பொருள். சர்க்கஸ், இன்று உள்ளதுபோல் பல அம்சங்களைக் கொண்டதாக அன்று இருக்க வில்லை. எனினும், மக்களிடையே பந்து எறிந்து வித்தை செய்பவர்கள், உடலை வளைத்து நெளித்து வித்தை செய்பவர்கள், விலங்குகளை அடக்கி வித்தை பல செய்பவர்கள், என வித்தை செய்து காட்டும் கோமாளிகள் பலர் இருந்தனர்.

சீனாவில் சிலர் உடலை வளைத்து வித்தை செய்து காட்டி வந்தனர். எகிப்தியர் விலங்குகளைப் பழக்கி வித்தை காட்டுவதில் சிறப்புப் பெற்று விளங்கினர்.


ரோமானியர்தாம், முதன் முதலில் இந்த வேடிக்கைகளையெல்லாம் ஒன்று சேர்த்து 'சர்க்கஸ்' என்னும் நிகழ்ச்சியாக நடத்தினர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, ரோமானியர்கள் சர்க்கஸ் நடத்தினர்.

குதிரைப்பந்தயம் முதலான பந்தயங்கள் வட்டமான இடத்தில் நடத்தப்படும். அதைச் சுற்றி மக்கள் அமர்ந்து வேடிக்கை பார்ப்பர். முதலில் சர்க்கஸ் திறந்த வெளியில் நடந்தது. பின்னர் கட்டடங்களிலும், கூடாரங்களிலும் நடத்தும் முறை தோன்றியது.

'சர்க்கஸ் மாக்சிமஸ்' என்ற சர்க்கஸ் பண்டைய ரோமானிய சர்க்கஸ்களுள் மிகவும் புகழ் பெற்றது. பெரியது. 1, 50,000 மக்கள் அமர்ந்து பார்க்கும் அளவில் அரங்கு அமைக்கப்பட்டிருந்தது.

ரோமானியர்கள் தற்காலம் போன்றே அக்கால அரங்குகளையும் சிற்றுண்டிகளை விற்கும் வசதிகளோடு அமைத்திருந்தனர். ஆரம்ப காலத்தில் சர்க்கஸ் இலவசமாகக் காண்பிக்கப்பட்டது. ஒவ்வொரு அரங்கிலும் ஒவ்வொரு நிகழ்ச்சி வீதம் காட்டப்பட்டது. பந்தாட்ட வித்தை, தனி மனிதன் உடலால் செய்யும் வித்தை, கயிற்றின் மீது நடத்தல், குதிரைப் பந்தயம், குத்துச் சண்டை போன்றவை நடைபெற்றன.

ரோமானிய வீழ்ச்சிக்குப்பின் இடைக்காலத்தில் இத்தகைய சர்க்கஸ் குழு வளர்ச்சி பெறவில்லை. நிலை குலைந்தது. ஆனால், பல குழுவினர் ஊர் ஊராகச் சென்று, தம் வயிறு வளர்க்க ஆங்காங்கே கடை வீதிகளிலும், சந்தைகளிலும் தமக்குத் தெரிந்த வித்தைகளைச் செய்து வந்தனர்.



1768-ல்தான் முதன் முதலில், இப்போது உள்ளது போன்று சர்க்கஸ் நடைபெற்றது. சர்ஜண்ட் மேஜர் ஃபிலிப் ஆஸ்ட்லி என்ற ஆங்கிலேயக் குதிரை வீரர் லண்டனில் புதிய முறையில் சர்க்கஸ் தொடங்கினார். இதுவே நவீன சர்க்கஸின் தொடக்கமாகும். இதற்காக ஆஸ்ட்லி, லண்டனில் ஒரு கட்டடம் கட்டி அதில் குதிரை விளையாட்டு, பபூன்கள் கயிற்றின் மீது நடத்தல், வளைய விளையாட்டுகள் போன்றவற்றை நடத்தினார். ஆஸ்ட்லிதான் சர்க்கஸில் கோமாளிகளின் கேளிக்கைகளைச் சேர்த்தவர்.

ஆஸ்ட்லியைப் பின்பற்றி பலரும் சர்க்கஸ் குழு அமைத்து நடத்தத் தொடங்கினார்கள். ஜான்பில் ரிக்கட்ஸ் என்பவர் அமெரிக்கா சென்று சர்க்கஸ் நடத்தினார். அந்த நாட்டைச் சேர்ந்த பெய்லி என்பவர் ஓர் ஆப்பிரிக்க யானையை வாங்கிப் பழக்கி சர்க்கஸ் காட்டினார். அதன் பிறகே காட்டு விலங்குகளைப் பயிற்சி அளித்து பயன் படுத்தும் பழக்கம் தோன்றியது.



இந்தியாவில், ஆங்கிலேயர் வந்த பின்னரே, சர்க்கஸ் நடத்தும் வழக்கம் முறையாகத் தோன்றியது. நம் நாட்டில், கழைக் கூத்து ஆடுவது என்பது பழங்காலத்திலேயே இருந்து வந்தது.

இந்தியாவில் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் பெருமளவில் சர்க்கஸில் ஈடுபாடு கொண்டவர்களாகத் திகழ்கிறார்கள்.

இன்று உலகிலேயே மிகப் பெரிய சர்க்கஸ் நிறுவனங்கள் உள்ள நாடு ரஷ்யாதான். ரஷ்ய மக்கள் பெருமளவில் சர்க்கஸை விரும்புகிறார்கள்.

— ஏ.கே.நாசர்

உங்கள் நூலகம்



சிறிய குழந்தைகளை மகிழ்விக்கும் கதைகள் குறைவு. அதை இந்நூல் தீர்த்து வைக்கிறது. விவேகம், நகைச்சுவை, நன்றியுணர்வு, வீரம், கடமை போன்றவற்றின் மேன்மையை விளக்கக் கூடிய 23 கதைகள் இதில் உள்ளன. எல்லாம் ராஜாராணிக் கதைகள். குழந்தைகளை மட்டுமல்ல பெரியவர்களையும் ஈர்க்கவல்லவை. படங்களும் உள்ளன.

சிறுவர்களுக்கான ராஜா ராணிக் கதைகள் 2ஆம் தொகுதி - மு. அப்பாஸ் மந்திரி- பக்.96 - ரூ. 42/- குட்புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், பிளாக் நம்பர் ஏஏ 96, பிள்ளையார் கோவில் எதிரில், அண்ணா நகர், சென்னை - 40.

மருது சகோதரர்களின் வீர வரலாறு!

ஆங்கிலேயர்களிடம் சிக்கிக் கிடந்த நமது நாட்டை அடிமைத்தளையிலிருந்து மீட்க எத்தனையோ குறுநில மன்னர்கள் போராடித் தம் அரசையும் உயிரையும் தியாகம் செய்துள்ளனர். அவர்களுள் சிவகங்கையை ஆண்ட மருது சகோதரர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். வீரம்மிக்க இவர்களது வாழ்க்கை வரலாறே இது. நல்ல முயற்சி.

மருது பாண்டியர் வீர வரலாறு - முகவை மேத்தா-பக். 104. ரூ. 45- இராமநாதன் பதிப்பகம், 1481, கார்டன் அவின்யூ, முகப்பேர், சென்னை - 600 050.

சிறுவர்களின் எதிர்ப்பார்ப்புகளுக்கு ஏற்றபடி சிறுகதைகள் படைப்பது கடினமான செயல். அதில் ஒரு செய்தி இருக்க வேண்டும். படிக்கச் சுவையாகவும் கூட இருக்க வேண்டும். வன்முறையைத் தூண்டுவதாகவோ, கலாசாரப் பண்புகளைத் தகர்ப்பதாகவோ அமைந்து விடக் கூடாது. அதோடு படிக்கும் சிறுவர்க்கும் சுவைத்துப் படிக்கும் படியாகவும் இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் பூர்த்தி செய்யும் வகையில் இதில் 13 சிறுகதைகள் உள்ளன.

சிந்திக்கத் தூண்டும் சிறுவர் கதைகள் - சைதை செல்வராஜ் - பக் 96- ரூ. 20/- குறிஞ்சி, 20 ஏ - ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை - 49.

ஒருவர் வாழ்க்கையில் வெற்றியடைய என்ன செய்ய வேண்டும் என்பதை மிகவும் சுவையாகவும் சிந்திக்கத் தூண்டும் வகையிலும் எழுதப்பட்டுள்ள அருமையான நூல். இளைஞர்களை மனதில் வைத்துக் கொண்டே எழுதப்பட்டது. எனினும் பள்ளி மாணவர்களும் படித்து இப்பொழுதே அடித்தளம் அமைத்துக் கொண்டு பயன்பெறலாம்.

இன்று முதல் சக்சஸ் - லேனா தமிழ்வாணன் - பக் 188 - ரூ. 38/- மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17.

— ரே

நறுமணப் பொருட்களின் ராணி!

வர்த்தக உலகில் நறுமணப் பொருட்களின் ராணியாகத் திகழ்வது மிளகு. உலகம் முழுவதும் மக்கள் மிளகை விரும்புகின்றனர். இந்தியாவில் மிளகாய் அறிமுகமாவதற்கு முன்பு காரத்துக்கு மிளகையே அனைவரும் பயன்படுத்தி வந்துள்ளனர். 'பைப்பர் நைக்ரம்' என்பது இதன் தாவரவியல் பெயர். இது பைப்ரேசியா என்ற குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் தாயகம் கேரளாவைச் சேர்ந்த திருவிதாங்கூர் மலைக்காடுகளே!



மிகப் பழங்காலத்திலிருந்தே கேரளத்திலிருந்து மிளகு அரேபியா வழியாக மத்திய தரைக்கடல் நாடுகள் மற்றும் மத்திய ஐரோப்பியாவுக்கு முக்கிய வணிகப் பொருளாக சென்றிருக்கிறது.

கிரேக்கர், ரோமானியர் மற்றும் ஐரோப்பியர் அந்தக் காலத்தில் மிளகை அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அப்போது ரோம் நகரைக் கைப்பற்றிக் கொண்ட 'அலாரக்' என்னும் தளபதி அந்நகரை விடுவிக்க 3,000 பவுண்ட்

எடையுள்ள மிளகை ஈடாகக் கேட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இரு விதையிலைத் தாவரமான மிளகு பொதுவாக பல பருவக் கொடியாகும். இருப்பினும் மிளகின் சில வகைகள் சிறு மரமாகவும், குத்துச் செடியாகவும் கூட காணப்படுகின்றன. வெற்றிலை இலை போல் அழகாக இதன் இலைகள் காணப்படுவதால் கலிபோர்னியாவில் அலங்காரச் செடியாகவே வளர்க்கப்படுகிறது.

இது ஒரு வெப்ப மண்டல தாவரம். இதற்கு வெப்பமும் ஈரமும் உள்ள காற்று மண்டலம் அவசியம்.

மிளகுக் கொடி, கணுக்களில் உண்டாகும் ஒட்டு வேர்களின் உதவியால் மரம் மற்றும் கல் மேல் ஏறிப் பற்றிக் கொள்ளும். பொதுவாகப் பயிரிடுபவர்கள் சொரசொரப்பான பட்டையுள்ள முருங்கை மற்றும் கல்யாண முருங்கை மரத்தின் மீது படர விடுவார்கள்.

இலைகள் பச்சை மற்றும் கரும்பச்சையாகக் காட்சி தரும். அகன்ற ஈட்டி வடிவ இலை தனித்தனியாகவே இருக்கும். வெளிர் மஞ்சள் நிறத்தில் சிறிய பூக்கள் பூக்கும். ஒரு கதிரில் 20 முதல் 80 கனிகள் காணப்படும். மிளகுக் கனி ஒரு விதை கொண்ட சதைக் கனியாகும். உருண்டையான மிளகுக் கனி முற்றுவதற்கு ஒன்பது மாதம் ஆகும். காய்கள் பச்சையாகவும், கனி முதிரா நிலையில் ஆழ்ந்த சிவப்பாகவும், முற்றிய நிலையில் கறுப்பாகவும் காணப்படுகிறது. நாம் பயன்படுத்தும் மிளகு தோல் சுருங்கிய விதையே! அதனால்தான் மேல் பகுதி சுருக்கங்களுடன் உள்ளது.

மிளகுக் கொடி பொதுவாக 15 - 20 ஆண்டுகள் வாழும் என்றாலும் சில கொடிகள் 50 ஆண்டுகளுக்கு மேலும்கூட வாழ்ந்ததுண்டு. 10 ஆண்டுகளுக்கு மேலான கொடியிலிருந்து தண்டுகளை வெட்டி எடுத்து நட்டால் அவை நன்கு வளர்ந்து பலன் தரும். கொடி நட்ட 2 - 3 ஆண்டுகளில் காய்க்கத் துவங்கும். எனினும் 7 ஆண்டுகளுக்கு மேல்தான் நிறைய விளைச்சல் தரும். முதிர்ந்த மிளகு டிசம்பர் மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரை அறுவடை செய்யப்படுகிறது.


இந்தியாவில் விளையும் மிளகில் 85% கேரளத்திலிருந்தே கிடைக்கிறது. 'மலபார் கறுப்பு மிளகு' என்ற அடை மொழியுடன் வலம் வந்து தரத்திலும் மதிப்பிலும் உயர்ந்து நிற்கிறது கேரள மிளகு.

மிளகு கறுப்பு மிளகு, வெள்ளை மிளகு, நீள் மிளகு அல்லது வால் மிளகு என்று மூன்று வகைப்படும். உலர்ந்த கறுப்பு பழமே கறுப்பு மிளகு. முழுவதும் உலர்ந்த மிளகுப் பழங்களைக் கையில் வைத்து தேய்த்தால் அதன் மேல் பகுதி உதிர்ந்து, உள்ளேயுள்ள விதைப் பகுதி வெள்ளையாகக் காணப்படும். இதனைச் சூரிய ஒளியில் காய வைத்து, பெறப்படும் மிளகே வெள்ளை மிளகு. கறுப்பு மிளகிலிருந்து வேறுபட்டது வால் மிளகு. இது சற்று நீண்டு காணப்படும். கறுப்பு மிளகைவிட வெள்ளை மிளகில் காரம் சுவை சற்றுக் குறைவு.

மிளகு உணவுக்குச் சுவையூட்ட மட்டுமின்றி மருத்துவ குணமும் கொண்டது. உமிழ் நீர் மற்றும் வயிற்று நீர் சுரப்புக்கும், சீரணத்துக்கும் தூண்டுகோலாய் அமைகிறது. சித்த மருந்து மற்றும் அலோபதி மருந்துகள் தயாரிப்புக்கும் பயன்படுகிறது. ஜலதோஷத்திற்கும் இருமலுக்கும் மிளகு சிறந்த நிவாரணி.


- எஸ். மோகனா

ஜீன்ஸ்



அமெரிக்காவைக் கண்டுபிடித்த கிறிஸ்டஃபேர் கொலம்பஸ் தனது கடல் பயணத்தின்போது பாய் மரக் கப்பல் கொடி மரத்தில் மிகவும் உறுதியான, எளிதில் கிழிக்க முடியாத முரட்டுத் துணியைப் பயன்படுத்தினார். அது ஜெனோவா எனும் இத்தாலிய நகரத்தில் உருவாக்கப்பட்ட துணி. எனவே ஜெனிஸ் என்று அந்த முரட்டுத் துணிக்குப் பெயர் சூட்டப்பட்டது. நாளடைவில் அது திரிந்து ஜீன்ஸ் ஆகிவிட்டது.

— ஏ.கே. நாசர்



ஒவ்வொன்றும் ரூ. 500/- மதிப்புள்ள 2 கைக் கடிகாரங்கள் பரிசு!

உங்களுக்கு மிகவும் பிடித்த இந்தப் போட்டியில் இதுவரை நிறைய பேர் கைக்கடிகாரங்களைப் பெற்றிருக்கிறீர்கள். இனியும் பலர் கைக்கடிகாரங்களைப் பெறப் போகிறீர்கள். இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். கடைசி தேதி **20.4.2002.** உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

இந்த மாத போட்டி

இங்கு உங்களுக்கு நன்கு அறிமுகமான ஆறு பூச்சிகளின் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியது அந்தந்த பூச்சிகளின் பெயர்களைக் கண்டுபிடித்து எழுத வேண்டியதுதான்.

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________
6. ____________________

ஆசிரியர், கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097




அகந்தை
இருக்கக் கூடாது!
மோகன் .சி.
அஸ்வமேத யாகம் நடத்தினார் ஸ்ரீராமன்.
குருவே, என்னை ஆசிர்வதியுங்கள்.
ராமா! நீ நன்றாக இருப்பாய்!
யாகம் முடிந்தது –
அயோத்தியில் எல்லா வளங்களும் நிறைந்திருக்க வேண்டும்.
அருகிலிருந்த குதிரையை ராமன் யதேச்சையாகத் தொட்டார்.
என்ன இது? நீங்கள் யார்?
நான் ஒரு சாதாரண அந்தணன். மகரிஷி துர்வாசரின் சாபத்தால் குதிரையாகி விட்டேன்.
MALAY FEATURES WORLD RIGHTS RESERVED




எப்படி?
உங்களுக்குச் சொல்கிறேன்.
ஒரு நாள் அந்தணர் பூஜை செய்து கொண்டிருந்தார்.
ஐயா, துர்வாச முனிவர் உங்களைக் காண வந்திருக்கிறார்.
சற்று நேரத்தில் வருவதாகச் சொல்.
அவரை உடனே தாங்கள் வந்து வரவேற்பது தான் மரியாதை.
என்ன சொல்றே? என்னை விட அவர் ஒன்றும் புனிதமானவர் அல்ல.
துர்வாசர் எல்லாவற்றையும் கேட்டார். அவருக்குக் கோபம் வந்தது...
எனக்கு எவ்வளவு அவமரியாதையைச் செய்து விட்டான்?
அகந்தை பிடிச்சவனே! நான் உன்னைக் குதிரையாக மாற சாபமிடுகிறேன்.
வேண்டாம் மகரிஷி. என்னை மன்னித்து விடுங்கள். அறியாமல் செய்து விட்டேன்.



அடக்கம் அமரருள் உய்க்கும்.
- வள்ளுவர்.

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. ஒட்டக்கூத்தரின் சமகாலப் புலவர் (5)

3. மிருதங்கத்தைப் போல் தோற்றமுடைய இன்னொரு இசைக்கருவி (3)

5. குதிரையை இப்படியும் அழைக்கலாம் (3)

11. மலைகளின் ராணி (3)

12. வாழைப்பழங்களில் ஒன்று (5)

வலமிருந்து இடம்

2. இந்தியா மூன்று பக்கமும் ________ ஆல் சூழப்பட்ட நாடு (3)

6. சத்தம் (4)

8. சிலப்பதிகாரத்தின் நாயகி (4)

9. தேங்காய் நாரிலிருந்து ________ திரிப்பார்கள் (3)

10. ________ தன் வாயால் கெடும் (3)

மேலிருந்து கீழ்

1. ________ படித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம் (5)

2. ________ இல்லையென்றால் கண் இருந்தும் குருடராகக் கருதப்படுவர் (3)

7. மதுரை மீனாட்சியின் தோளில் அமர்ந்திருப்பது (2)

8. தீக்குச்சி எரிவதற்குக் காரணம் (5)

9. தேன் விரும்பி (3)

கீழிருந்து மேல்

4. தேசப்பிதா (3)

5. காற்றும் மழையும் தீவிரமானால் இது உருவாகும் (3)

6. கடலில் இது ஓயாது (2)


11. அழுத்தத்தால் பூமியிலிருந்து பீறிட்டுக் கொண்டு வரும் நீர் (3)

12. நாணயம் மிக்கவர்களை ________ ஆனவர்கள் எனவும் அழைக்கலாம் (3)

விடை 38 ஆம் பக்கம்

- எஸ். துர்காகாத்யாயனி,
பத்தாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.


எங்கள் ஊரில் நடந்தது!




டிக்கெட்

சமீபத்தில் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தேன். ஒரு பள்ளி மாணவன் பேருந்து படிக்கட்டில் தொங்கியபடியே கண்டக்டரிடம், ''ஒரு டிக்கெட் குடுங்க'' என பந்தாவாகக் கேட்டான். அதற்கு கண்டக்டர், ''முதல்ல படிக்கட்டில் தொங்காமல் மேலே ஏறி வாப்பா! இல்லேன்னா 'ஒரு டிக்கெட்' இல்லே! 'ஒரேயடியா டிக்கெட்' தர வேண்டியதாப் போயிடும்'' என்றார். பஸ்ஸே சிரிப்பில் குலுங்கியது. அம்மாணவன் அசடு வழிய மேலேறி வந்தான்.

- ஆர்.பிரசன்னா,
காந்தி கிராமம், கரூர்.





பாலிஷ்!

போலியோ சொட்டு மருந்து விடுவதற்காக என் 4½ வயது தங்கையை அருகில் இருந்த முகாமுக்குக் கூட்டிச் சென்றோம். அங்கே அவர்கள் சொட்டு மருந்து ஊற்றிவிட்டு தங்கையின் சுண்டு விரலில் அடையாள மை வைத்தார்கள். உடனே என் தங்கை, ''எல்லா விரல்லேயும் நெயில் பாலிஷ் வச்சு விடுங்க'' என்று கூற, அங்கிருந்தவர்கள் சிரித்து விட்டனர்.


- ப. சௌந்தர்யா, ஆறாம் வகுப்பு,
பிரின்ஸ் மேல்நிலைப்பள்ளி,
மடிப்பாக்கம், சென்னை.

சங்கிலி

எங்கள் வீட்டுக்குப் பக்கத்து தெருவிலிருக்கும் என் நண்பனைப் பார்க்க அவனுடைய வீட்டிற்குச் சென்றேன். அங்கு அவனுடைய தங்கை மட்டும் வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்தாள். அவளிடம் நான், ''எங்கே சங்கிலியைக் காணோம்?'' என்று கேட்டேன். அதற்கு அவள் ''வீட்டில் கடன் நிறைய இருக்கு. அதான் சங்கிலியை அடகு வச்சிட்டோம்'' என்று சொல்லவும் எனக்குச் சிரிப்பு வந்து விட்டது. பிறகு ''உன் அண்ணன் சங்கிலி முருகனைப் பார்க்க வந்தேன்'' என்று சொல்ல அவளும் சிரித்தாள்.

- சி. இராஜசேகரன், விருதுநகர்.


நீண்டகாலம் வாழும் பயிர் எது?



சளி...

நானும், தம்பியும் அப்பாவுடன் கடைத் தெருவுக்குச் சென்றிருந்தோம். தம்பி அப்பாவிடம் ஃபைவ் ஸ்டார் சாக்லேட் வேண்டுமென்றான். அப்பாவோ, "சாக்லெட் சாப்பிட்டால் சளி பிடிக்கும். உடல் நலம் கெடும். அதனால் ஆப்பிள் வேண்டுமானால் வாங்கித் தருகிறேன்" என்றார். உடனே தம்பி, "ஆப்பிள் பனிப் பிரதேசமான காஷ்மீரில்தானே விளையுது. அந்த ஆப்பிளைச் சாப்பிட்டால் தான் சளி பிடிக்கும்" என்று சொல்ல அப்பாவும் நானும் சிரித்துவிட்டோம்.


- எம்.மகேஷ், தாரமங்கலம்



பயிர்

அன்று ஞாயிற்றுக்கிழமை. வீட்டிற்கு சித்தி, சித்தப்பா குடும்பத்துடன் வந்திருந்தார்கள். அப்போது என் அண்ணனின் திருமணம் குறித்துப் பேசுகையில், என் அப்பா, "கல்யாணம்ங்கிறது ஆயிரங்காலத்துப் பயிர்ப்பா!" என்று என் சித்தப்பாவிடம் சொல்ல இதை, என் சித்திப் பையன், ஆறு வயது குட்டி கேட்டுக் கொண்டிருந்தான். அச்சமயம், தொலைக்காட்சியில் வினாடி வினா நிகழ்ச்சியொன்று ஓடிக் கொண்டிருக்க, அதில் "மிகவும் அதிக காலம் வாழும் பயிர் எது?" என்று கேட்க, டி.வி.யில் பங்கேற்கும் பள்ளி மாணவர்கள் வேறு எதையோ கூறி பதிலளித்ததும், நடுவரும் சரியென்று சொல்லிவிட்டார். இதைப் பார்த்த என் சித்தியின் குட்டி, என் அப்பாவிடம், "ஆயிரங்காலத்துப் பயிர் எது பெரியப்பா?" என்றதும் என் அப்பா, "கல்யாணம்" என்று கூற, அச்சுட்டி "அப்ப ஏன் நடுவர் வேறு பதிலுக்குச் சரியென்கிறார்?" என்றதும் அப்பா உட்பட வீடே சிரித்தது.

- ஏ.எல்.ராவியாகனி, காரைக்கால்



சிலேட் கடை

எங்கள் வீட்டுக்கருகே புதிதாக ஒரு காய்கறி அங்காடி வந்திருக்கிறது. அங்கு ஒவ்வொரு காய்கறிக்கும் மேல் ஒரு சிலேட் வைத்திருப்பார்கள். அதில் விலையை அன்றன்றைக்கு எழுதி வைக்கிறார்கள். ஒரு நாள் என் அம்மாவுடன் அக்கடைக்குச் சென்ற என் தங்கை "இங்கே இவ்வளவு சிலேட் இருக்கே, எனக்கு ஒண்ணு வாங்கிக் கொடு" என அடம்பிடிக்க, "இது சிலேட் கடை இல்லே. வேற கடைல வாங்கலாம்" என சமாதானப்படுத்தி அழைத்து வந்தார் என் அம்மா.

- ப. அஷோக்,
பன்னிரண்டாம் வகுப்பு,
பிரின்ஸ் மேல்நிலைப்பள்ளி,
மடிப்பாக்கம், சென்னை.

எவருடையது?

இராஜேந்திர பிரசாத் பாட்னாவிலிருந்து தமது ஊருக்குப் போவதற்காக விசைப் படகில் கங்கை நதியில் பயணம் செய்தார்.

அவருக்கு எதிர்புறத்தில் அமர்ந்திருந்த இளைஞன் ஒருவன் ஓயாமல் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தமையால் அதனுடைய நெடி அவரை வாட்டியது.

அதனால் இளைஞனைப் பார்த்து, "தம்பி அந்த சிகரெட் உன்னுடையதுதானே?" என்று கேட்டார்.


அந்த இளைஞன், இன்னும் வேகமாகப் புகையை உள்ளுக்கு இழுத்து வெளியே ஊதிவிட்டு, "என்னுடையது இல்லாமல் பின்னே உங்களுடையதா?" என்று விஷமமாகக் கேட்டான்.

இராஜேந்திர பிரசாத் அவர்கள் சாந்தமாக, "தம்பி! அந்த சிகரெட் உன்னுடையது என்றால் அதிலிருந்து வெளியே விடுகின்ற புகையும் உன்னுடையது இல்லையா? அதையும் உன்னிடம் வைத்துக் கொள்ளாமல் பிறர்மீது ஊதிவிடுகிறாயே?" என்றார்.

அவருடைய பேச்சைக் கேட்ட இளைஞன் வெட்கத்துடன் தலை குனிந்து கையிலிருந்த சிகரெட்டை வெளியே வீசி எறிந்தான்.

— சு. சௌம்யாயனி,
எட்டாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ்
ம.மே.நி.பள்ளி, தூத்துக்குடி.

• பெரியார்





• இராஜேந்திர பிரசாத்

சார்லி சாப்ளினுக்கு இரண்டாவது பரிசு!

போட்டி

ஒரு சமயம் அமெரிக்காவில் 'சார்லி சாப்ளின்' போல நடித்துக் காட்டும் போட்டி ஒன்று நடைபெற்றது.

அப்போட்டியில் யாருக்கும் தெரியாமல் சினிமா உடையுடன் ஒரிஜினல் சார்லி சாப்ளினும் கலந்து கொண்டு நடுவர்கள் முன்னிலையில் நடித்துக் காட்டினார். ஆனால் வேடிக்கை என்னவென்றால் போட்டியில் கலந்து கொண்ட நிஜ சார்லி சாப்ளினால் இரண்டாவது பரிசையே வெல்ல முடிந்தது.

— ஜி. பிரணவ், கரூர்.

உயிரோடு...

பிரிட்டிஷ் பிரதமராக இருந்த லாயிட் ஜார்ஜ் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அவரை இழிவுபடுத்தும் பொருட்டு கூட்டத்தில் ஒருவன், "உங்கள் தாத்தா கழுதை வண்டி ஓட்டியவர் என்பது உமக்கு நினைவிருக்கிறதா?" என்று கத்தினான். உடனே லாயிட் ஜார்ஜ், "என் தாத்தாவின் வண்டி போன இடம் தெரியவில்லை. ஆனால் கழுதை உயிரோடிருப்பதை இங்கே கண்டுபிடித்து விட்டேன்" என்றார் அமைதியாக.

— அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

சிக்கனம்

ஒருநாள் ஈ.வெ.ரா. அவர்கள் தனது

தங்கையின் வீட்டுக்கு உணவு அருந்துவதற்காகச் சென்றிருந் தார். அவர் தங்கையின் மகன் அவர் கை கழுவுவதற்காகத் தண்ணீரை ஒரு குவளையில் எடுத்து 'மொடமொடவென' ஊற்றினான். அப்பொழுது தன் தங்கையின் மகனின் தலை யில் ஒரு கொட்டு வைத்து "தண்ணீரை இப்படி ஊற்று கிறாயே, இதுவே நெய்யாக

• சார்லி சாப்ளின்





• தாகூர்

இருந்தால் இப்படி ஊற்றுவாயா?" என்று கூறி சிக்கனத்தைக் கடைபிடிக்கும் முறையைப் பற்றி அச்சிறுவனுக்கு உணர்த்தினார். அன்று முதல் அச்சிறுவனும் சிக்கனத்தைக் கடைபிடித்து வாழ்ந்தான்.

— எம். சசிரேகா

கவிஞரின் கடமையுணர்வு

கவிஞர் இரவீந்திரருக்கு நோபல் பரிசு கிடைத்த 1913ஆம் ஆண்டில், வங்க நாட்டில் இலக்கிய மாநாடு ஒன்று கூட்டுவதாக ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த மாநாட்டிற்கு அக்கவிஞரையே தலைவராகத் தேர்ந்தெடுத் தார்கள்.

தலைவர் தம் சொந்தக் கிராமத்தில் ஒரு வேலைக்காரனுடன் தங்கியிருந்தார். மகா நாட்டுக்கு முந்தைய நாள், தாம் மகாநாட்டிற்கு வரமுடியாது என்று தந்தியடித்து விட்டார். அதனை அறிந்த நண்பர் ஒருவர், என்ன செய்தி என்று தெரிந்து கொள்வதற்காக உடனே டாக்காவிலிருந்து புறப்பட்டு அன்று மாலைப் பொழுதிலேயே அக்கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்.

அந்தக் கிராமத்திலே வாந்திபேதி நோய் நிலவியது. இரவீந்திரர் அவரை மௌனமாக வரவேற்று மேல் மாடத் தில் தங்கச் செய்தார். அதன் பின்னர் அந்நண் பரை நோக்கி, "என் வேலைக்காரனுக்கு வாந்திபேதி கண்டிருக் கிறது. கீழே இருக் கிறான். நான் மகாநாட் டுக்கு வராத காரணம் இதுதான்" என்று கூறினார். அதன் பின்னர் வேலைக்காரனுக்குப் பணிபுரியச் சென்று விட்டார்.

நண்பரோ 'காலரா' பயத்தினால் மாடத்தை விட்டுக் கீழே இறங்கவில்லை. அதிகாலையில் துயில் எழுந்ததும், உதயகீதம் பாடிக் கொண்டி ருந்த கவிஞரின் குரல் நண்பரின் காதில் விழுந்தது.

இரவீந்திரர், நண்பரிடம் வந்து, "வேலைக் காரனைத் தனியே விட்டு நான் மகாநாட் டுக்கு வருவது எப்படி? அவன் பிழைத்துக் கொண்டான். ஆனாலும் பலவீனமாக இருக் கும் நிலையில் அவனுக்கு என்னுடைய பணி யும் கவனமும் அவசியமானது. வேறு எவரை யாவது தலைவராகக் கொண்டு மகாநாட்டை நடத்திவிடுங்கள்" என்று கூறினார்.

நோயுற்ற ஒரு வேலைக்காரனுக்குப் பணி செய்ய வேண்டுமென்று, இலக்கிய மகா நாட்டுத் தலைமையையும் துறந்த கவிஞரின் கடமையுணர்வும் சாவுக்கும் அஞ்சாத தன்மை யும் அந்நண்பரை வியப்படையச் செய்தன.

அதன் பின்னர் ஒரு மாதத்திற்குப் பிறகு இரவீந்திரர் தலைமையிலேயே மகாநாடு நடை பெற்றது.

— எஸ். துர்கா காத்யாயனி,
பத்தாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.

அப்பா எனக்கு 'பார்ட் சிம்சன்' பொம்மையை வாங்கித் தர மாட்டாராம். முதலில் அம்மா சரி, வாங்கித் தரேன்னுதான் சொன்னாள். ஆனால் இந்த அப்பா ஒரேயடியாய் முடியாதுன்னு மறுத்துட்டார். இதை வாங்கிக் கொடுத்துட்டா, நான் குட்டிச்சுவராய் போயிடுவேனாம்.

காசின் அருமை எனக்குத் தெரியலை என்றார் அப்பா. கேட்டதும் 'பார்ட் சிம்சன்' கிடைத்து விட்டால், குழந்தைகள் முரடர்களாய் வளர்வார்கள் என அபிப்ராயம் தெரிவித்தார். இந்த மாதிரி குழந்தைகளுக்கு, அவர்கள் விரும்புவது, அவர்களுக்கு எளிதில் கிடைத்தாக வேண்டுமாம்... அதற்காக எது வேண்டுமானாலும் செய்வார்களாம்.

கடைசியாய், நான் வெறுத்தாலும் கூட, 'பார்ட் சிம்சனு'க்குப் பதிலாக ஒரு சீன பீங்கான் பன்றிப் பொம்மைதான் எனக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டது. அந்தப் பன்றியின் முதுகில் ஒரு ஓட்டை இருந்தது. அது வழியாக நாணயத்தைப் போட்டுச் சேமிக்கலாம். எப்படியோ அப்பா விரும்பிய மாதிரியே நான் சரியாக வளரப் போறேன்.

எனக்குப் பிடிக்கவில்லை என்றாலும், தினமும் நான் ஒரு கோப்பை கோகோ குடிக்க வேண்டும். மளமளவென்று குடித்தால், ஒரு ரூபாய் நாணயம் கிடைக்கும். அடம் பிடித்து தாமதம் செய்து குடித்தால், எட்டணா கிடைக்கும். வேண்டாம் என விசிறி அடித்தால், ஒன்றும் கிடைக்காது. நான் கிடைக்கும் காசைப் பன்றியின் மேல் உள்ள ஓட்டையில் போட்டு விடுவேன். காசைப் போட்ட பின்னால், அதைக் குலுக்கினால், கிணுகிணுக்கும். நிறைய காசு சேர்ந்த பின்னர், குலுக்கினாலும் கிணுகிணுக்காதாம். பன்றி கிணுகிணுக்காத வரைக்கும் காசு சேர்ந்த பிறகு அதை வச்சு, பார்ட் சிம்சன் வாங்கலாம் என்றார் அப்பா. மொத்தத்தில் இது எனக்குக் காசு சேமிப்பது குறித்து, நல்ல படிப்பினையைத் தரும் என்று அப்பா கருதினார்.



என் பன்றி இருக்கே, அது ரொம்பப் புத்திசாலி, படு சமத்து. அதன் மூக்கைத் தொட்டால் குளுமையாக இருக்கும். அதன் முதுகு ஓட்டை வழியே ஒரு நாணயத்தை நுழைத்தால், அது சிரிக்கும். ஆனால் அதற்குள் காசைப் போடாட்டிகூட, அது நம்மைப் பார்த்து எப்போதும் அழகாய் சிரிக்கும் என்பதுதான் விசேஷம்.



நான் அதுக்கு ஒரு பேர் வைத்தேன். பிகாசன். அழகா இருக்கா? எங்கள் ஊர் தபால் ஆபீஸிலே பிகாசன்னு ஒருத்தர் இருந்தார். அவர் பெயரை அந்தப் பொம்மைக்கு வச்சிட்டேன். பிகாசன் தபால் ஆபீஸிலே வேலை பார்க்கிறார். எங்கப்பாவே போய் கேட்டாலும், ஒட்டின

பிறகு தபாலைப் பிரிக்க விட மாட்டார். அவ்வளவு நேர்மையானவர்!

பிகாசன் எனது மற்ற பொம்மை களைப் போல, எந்தத் தொந்தரவும் கொடுக்க மாட்டான். அவன் பரம சாது. அவனுக்குள் ஸ்பிரிங், பேட்டரி என்று எதுவும் கிடையாது. ஓடுகிற அவசியமே அவனுக்கு இல்லாததால், அவன் விழுந்துடுவானோன்னு பயம் இல்லை. இருந்தாலும் ஒண்ணுல ஜாக்கிரதையா இருக்கணும். அவன் மேஜையில் இருந்து தவறி விழுந்து உடைந்திடக் கூடாது. "பிகாசன் ஜாக்கிரதையா இரு. நீ சீன பீங்கானால் செய்யப் பட்டிருக்கிறாய்... விழுந்தால் சுக்கு நூறாய் போயிடுவே... மறந்துடாதே..." என்று பிகாசன் பூமியைப் பார்த்து கவிழ்ந்து வேடிக்கை காட்டும்போது எச்சரிக்கை செய்வேன். அவனோ என்னைப் பார்த்து புன்னகைத்து, நான் அவனை என் கையில் எடுத்து வைத்துக்கொள்ளும் வரை, பொறுமை யாகக் காத்திருப்பான்.



என் அருமை பிகாசன்!

அவன் சிரிச்சான்னா ரொம்பப் பிடிக்குது இப்பல்லாம். அவனுக்காகவே திரும்பத் திரும்ப கோகோ குடிக்கிறேன். கிடைக்கும் நாணயத்தை அவன் முதுகுக்குள் தள்ளி விடுவேன், நாணயத்தைத் தள்ளி விட்ட பின் கூட, அவன் எப்படி கொஞ்சம் கூட மாறாமல் பழைய மாதிரியே இருக்கிறான்

ஆங்கில வழி தமிழாக்கம்: சொ. பிரபாகரன்

என்பதைக் கவனிப்பேன். ''எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்று அவனிடம் சொல்வேன். ''சத்தியமா சொல்றேன். என் அப்பா அம்மாவைவிட எனக்கு உன்னைத்தான் இப்ப ரொம்பப் பிடிச்சிருக்கு. கடைசியில் உன்னை உடைக்கத்தான் போகிறார்கள். இருந்தாலும் கூட, எனக்கு உன்னைத்தான் பிடிக்கும். நீ மேஜையில் இருந்து தவறி குதிச்சிடாதே. அப்படி குதிக்காமல் இருக்க, அந்தக் கடவுள்தான் உன்னைக் காப்பாத்தணும்.''

நேற்று அப்பா பிகாசனை எடுத்து தலை கீழாக வைத்து குலுக்க ஆரம்பித்து விட்டார். ''ஜாக்கிரதை அப்பா'' நான் சொன்னேன். ''இப்படி குலுக்கினா பிகாசனுக்கு வயித்து வலி வந்துடும்.''

அப்பா சொன்னார்: ''சத்தமே வரலை பார்த்தியா? இதுக்கு என்ன அர்த்தம் தெரியுமா, யோவாய்? சீக்கிரம் உனக்குக் கடையில் இருந்து 'பர்ட் சிம்சன்' வரப் போகுதுன்னு அர்த்தம்.''

''பர்ட் சிம்சன் நம்ம வீட்டுக்கு வரப் போகுதா? உண்மையிலேயே கிரேட்தான். ஆனால் அதுக்காக பிகாசனைப் போட்டுக் குலுக்காதீங்க. எனக்கு உடம்பெல்லாம் கூசுது...'' நான் சொன்னேன்.

அப்பா பிகாசனை மறுபடியும் மேஜையில் வைத்துவிட்டு, அம்மாவைக் கூப்பிடப் போனார். வரும்போது, ஒரு கையில் அம்மாவை இழுத்துக் கொண்டும், மறுகையில் ஒரு சுத்தியோடும் காட்சி தந்தார்.

''இப்ப பார்த்தியா, நான் எவ்வளவு சரியாய் இருந்திருக்கேன்னு'' என்றார் அப்பா அம்மாவிடம் பெருமையாக. ''இப்ப இவனுக்குக் காசின் மதிப்பு விளங்கிவிட்டது... சரிதானே, நான் சொல்றது யோவாய்?''

''ஆமாம், அப்பா... காசின் மதிப்பு எனக்குப் புரிஞ்சு போச்சு...'' என்ற நான், ''அதுக்காக எதுக்கு இந்தச் சுத்தியைத் தூக்கிட்டு வந்திருக்கீங்க?'' என்றேன்.


''உனக்காகதான்'' என்று அப்பா சுத்தியை என்னிடம் கொடுத்தார். ''ஜாக்கிரதையா செய்'' என்றார்.

''நிச்சயமா நான் ரொம்ப ஜாக்கிரதையா இருப்பேன்'' என்று சொல்லி சுத்தியை வாங்கிக்கொண்டு, நான் சும்மா இருந்தேன். அப்பா எனது ஜாக்கிரதை உணர்வைப் பார்த்து வெறுத்துப் போனார். ''இந்தப் பன்றியை உடைடா...''

''என்ன?'' நான் கேட்டேன், ''நம் பிகாசனையா?''

''ஆமாம் பிகாசனைதான்...'' என்றார் அப்பா. ''இதை நீ இப்ப உடைக்கலாம். நீ பர்ட் சிம்சன் வாங்க எல்லா தகுதியையும் அடைந்துவிட்டாய். இதை உடைச்சு உள்ளே இருக்கிற காசை எடுத்துக் கொண்டு பர்ட் சிம்சன் வாங்கப் போகலாம்... அதை வாங்கறதுக்காக எவ்வளவு கடுமையா உழைச்சிருக்கே, மை டார்லிங்...''

பீங்கான் பன்றிக்கே உரித்தான ஒரு சோகம் பிகாசன் முகத்தில் அப்பிக் கொண்டது. இந்த பர்ட் சிம்சன் பாழாய் போகட்டும்! இந்த பர்ட் சிம்சனுக்காக, எனது நண்பனின் மண்டையை, நானே சுத்தியால் பிளக்க



முடியுமா? நான் அப்பாவிடம் சுத்தியைக் கொடுத்தேன், ''பிகாசனே எனக்குப் போதும்...'' என்றேன்.

"ஓ, யோவாவ், என்னாச்சு உனக்கு?" அப்பா என்னைச் சமாதானப்படுத்தினார். "இதன் மூலம் வர வேண்டிய படிப்பினை உனக்கு வந்தாச்சு. இப்ப இதை உடைக்க வேண்டியதுதான்..."

அப்பாவே சுத்தியை உயர்த்திவிட்டார். உடைதலை எதிர்பார்த்து அம்மாவும் கண்ணைச் சுருக்கி நின்றாள். பிகாசனின் சோர்ந்த புன்சிரிப்பை நான் பார்த்தேன். என்ன நடக்க போகிறது என்று எனக்குப் புரிந்துவிட்டது. நான் ஏதாவது செய்தாக வேண்டும். இல்லை என்றால், பிகாசன் செத்துப் போவான். "அப்பா!" என அவர் காலை நான் பிடித்துக் கொண்டேன்.

''எனக்கு இன்னொரு ஒரு ரூபாய் நாணயம் வேண்டும்...'' நான் கெஞ்சினேன். "நாளை கோகோ சாப்பிடும்போது எனக்கு இன்னொரு ஒரு ரூபாய் நாணயம் கொடுங்க. நானே அதை உள்ளே போட்டு விடுகிறேன். பிறகு நாளை நானே இதைச் சுத்தியால் உடைத்து விடுகிறேன்... சத்தியமாய்.''

"இன்னொரு நாணயமா?" என்ற அப்பா நமட்டுச் சிரிப்புடன், சுத்தியலைக் கீழே வைத்தார். அம்மாவிடம் திரும்பி, ''பார்த்தியா நம்ம பையனுக்குப் போதுமான விழிப்புணர்ச்சியை வளர்த்துட்டேன்'' என்றார் பெருமையாக.

அவர்கள் போனதும் நான் பிகாசனைக் கட்டிக் கொண்டேன். பிகாசன் எதுவும் சொல்லவில்லை. எனது கைகளுக்குள் அவன் லேசாக நடுங்குவதை என்னால் உணர முடிந்தது. ''கவலைப்படாதே. நான் உன்னை எப்படியும் காப்பாத்துவேன்'' என்று அவன் காதுக்குள் கிசுகிசுத்தேன்,

இரவு அப்பா ஹாலில் உட்கார்ந்து டி.வி பார்த்துக் கொண்டிருந்தார். அவர் படுக்கைக்குப் போகும்வரை காத்திருந்தேன். பின்னர் சத்தம் போடாமல் வந்து, நான் பிகாசனை எடுத்துச் சென்றேன்.

நாங்கள் ரொம்ப தூரம் நடந்து போனோம். கடைசியில் நெல்வயலை அடைந்தோம். 'பன்றிக்கு வயல் என்றால் ரொம்பப் பிடிக்குமாமே... அதுவும் நெல் வயல் என்றால் ரொம்பப் பிரியமாமே?' நான் அவனை வயலின் தரையில் கிடத்தினேன்.

''எனக்கு நெல்வயல் ரொம்பப் பிடிக்கும்'' என்று ஏதாவது பிகாசன் சொல்வான் என நான் காத்திருந்தேன். ஆனால் அவன் எதுவும் சொல்லவில்லை. நான் அவன் மூக்கைத் தொட்டு, 'குட்பை' சொல்ல நினைத்தபோது, அவன் என்னைச் சோகமாகப் பார்த்தான். அவனுக்குத் தெரியும், இதற்குப் பிறகு எப்பவுமே அவன் என்னைப் பார்க்கப் போவது இல்லை என்று!

(ஹீப்ரு கதை)


தும்பிக்கை



யானையின் தும்பிக்கை 40,000 தசைகளால் ஆனது. ஒரு எலும்பு கூடக் கிடையாது. மிக மெல்லிய ஒலியைக் கேட்கும் ஆற்றலும், சற்றுத் தொலைவில் உள்ள சுண்டெலியின் பாதச் சுவடுகளைக் கூட பார்க்கும் நுண்ணிய பார்வை சக்தியும் கொண்டது யானை.

- எஸ். மோகன்ராஜ்


கோகுலம்
போஸ்டர்


ஆஸ்கருக்குச் சென்ற லகான்!



குடல் புழுக்களை ஒழிப்பது எப்படி?

● து. மகேஸ்வரி, கந்தர்வக் கோட்டை.

? என் காதுக்குள் அடிக்கடி தண்ணீர் புகுந்து கொள்கிறது. சில மணி நேரம் காது அடைத்துக் கொள்கிறது. அப்போது காது வலிக்கிறது. பிறகு அது தானாகவே சரியாகிவிடுகிறது. இது எதனால்?

! கிணற்றில் அல்லது நீச்சல் குளத்தில் குளிக்கும்போது காதுக்குள் தண்ணீர் புகுந்துவிடும். சிலருக்கு அரிதாக வீட்டில் குளிக்கும்போது இவ்வாறு ஏற்படலாம். காதின் அமைப்பு ஒவ்வொருவருக்கும் வேறுபடுவதுதான் இதற்குக் காரணம். சிலருக்குக் காதில் மிக எளிதில் தண்ணீர் புகுந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் அதன் அமைப்பு இருக்கும். காதில் தண்ணீர் புகுந்து விடுவதால் காது அடைக்கிறது. காதில் அழற்சி அல்லது புண் இருக்குமானால் வலி ஏற்படும். நன்றாகத் தலையைச் சாய்த்துக் கொண்டு, தண்ணீர் புகுந்த காதில் ஒரு சொட்டுத் தண்ணீரை விட்ட பின்பு, தலையை நிமிர்த்தினால் உள்ளே சென்ற தண்ணீர் வெளியே வந்து விடும். தேங்காய் எண்ணெயில் பஞ்சை நனைத்துப் பிழிந்துவிட்டு, குளிக்கும் முன்பு காதில் வைத்துக் கொண்டால் எண்ணெயைக் கடந்து தண்ணீர் உள்ளே செல்லாது. நீச்சலடிப்பவர்கள் காதில் 'ear plug'ஐ பொருத்திக் கொள்வது நல்லது. காது வலி நீடித்தால் மருத்துவரை அணுகி, ஆலோசனை பெற வேண்டும்.





● ம. குணசுந்தரி, சேலம்.

? எந்தெந்த நோய்களுக்குத் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் டாக்டர்? குழந்தைக்குச் சளி இருக்கும் போது தடுப்பூசி போடலாமா?

! காசநோய், தொண்டை அடைப்பான். கக்குவான் இருமல், ரணஜன்னி, மஞ்சள் காமாலை, சிற்றம்மை, காலரா, அம்மைக் கட்டு, தட்டம்மை, ஜெர்மன் தட்டம்மை, வெறி நாய்க்கடிநோய், டைபாய்டு ஆகிய நோய்களுக்குத் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இளம்பிள்ளைவாதம்

டாக்டர் கு. கணேசன்

நோய்க்குத் தடுப்புச் சொட்டு மருந்து விட்டுக் கொள்ள வேண்டும். குழந்தைக்குச் சளி இருந்தால் அதற்குரிய நுண்ணுயிர்க் கொல்லி மருந்தைக் கொடுத்துக் கொண்டு தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளலாம்.

● இரா. பழனி, உதகை.

? பேதிக்கு மருந்து சாப்பிட்டால் குடல்புழுக்கள் ஒழியும் என்று என் பாட்டி கூறுகிறார். இது உண்மையா டாக்டர்?

! உண்மையில்லை, தம்பி. பேதி மருந்து அல்லது பேதி மாத்திரைகளைச் சாப்பிடும் போது குடல் இயக்கம் தூண்டப்பட்டு மலம் எவ்விதச் சிக்கலில்லாமல் எளிதில் வெளியேறிவிடும். இவற்றால் குடல்புழுக்கள் ஒழிவதற்கு வாய்ப்பில்லை. காரணம், குடல் புழுக்கள் குடலில் முட்டை, லார்வா, புழு என்னும் மூன்று வகை வளர்ச்சி நிலைகளில் உள்ளன. இவற்றில் முட்டையும் புழுக்களும் குடல் சுவர்களில் 'அட்டை' போல் ஒட்டிக் கொள்கின்றன. இவை பேதி மாத்திரைகளால் வெளியேறுவதில்லை. 'லார்வா'க்கள் குடலிலிருந்து ரத்தக் குழாய்க்குள் ஊடுருவி கல்லீரல், இதயம், நுரையீரல், தொண்டை, உணவுக் குழாய் ஆகிய பல உடற்பகுதிகளுக்கும் பயணம் செய்து கொண்டிருக்கின்றன. இந்தப் பயணத்தின்போது தான் லார்வா நிலையில் உள்ளவை முழுப்புழுக்களாக வளர்ச்சி அடையும். ஆகையால் பேதி மருந்துகள் இந்த லார்வாக்களை ஒழிப்பதற்கு உதவுவதில்லை. மாறாக, குடல்புழு மாத்திரை ஒன்றை மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிட்டால் அது ரத்தத்தில் கலந்து, உடல் முழுவதும் பயணித்து, முட்டை, லார்வா, புழு ஆகிய அனைத்தையும் அழித்து விடும். இதனால் குடல்புழு முற்றிலும் ஒழியும்.







கேட்கட்டுமா டாக்டர்?

● நஜிபா, திருமயம்.

? கழுத்துப்பகுதியில் தைராய்டு சுரப்பி வீங்கிக் காணப்படுகிறது. இதற்கும் உடல் மெலிவதற்கும் ஏதேனும் தொடர்புண்டா? இதை எவ்வாறு குணமாக்கலாம்?

! உங்கள் வயதைக் குறிப்பிடவில்லை. தைராய்டு சுரப்பி வீங்குவதற்குப் பல காரணங்களைக் கூறலாம். உங்களுக்கு எந்தக் காரணத்தினால் தைராய்டு சுரப்பி வீங்கியுள்ளது என்பதை முதலில் பல பரிசோதனைகள் மூலம் கண்டறிய வேண்டும். உடல் மெலிவதற்கும் தைராய்டு சுரப்பி வீங்குவதற்கும் தொடர்பு உள்ளது. நீங்கள் உடனடியாக ஓர் அகச்சுரப்பியியல் மருத்துவரைச் (Endocrinologist) சந்தித்து ஆலோசனை பெறுங்கள். குணமடைவீர்கள்.


20 ஆளப் பிறந்தவன்

கதை: ராஜி   படம்: லலிதா





வீரசிம்மனைக் கீழே தள்ளிவிட்டு அரண்மனையை நோக்கி ஓடியது குதிரை.
அரண்மனையில்
என்னது, இளவரசரின் குதிரை மட்டும் வருகிறது!
ஐயோ, இளவரசருக்கு என்ன ஆச்சு? எங்கே போயிருக்கிறார்?
ஜெயசிம்மன் அரண்மனைக்கு வந்தவுடன் —
இளவரசே! தாங்கள் இப்படி அறிவிக்காமல் செல்லலாமா?
ஆபத்து ஒன்றும் இல்லையே?
உங்கள் குதிரை மட்டும் வந்தபோது நாங்கள் என்னவோ ஆபத்து என்று பயந்து விட்டோம்.
உங்களைத் தேடி வருவதற்கு இருந்தேன்.


நடந்தவற்றை விளக்கினான் ஜெயசிம்மன்.
வீரசிம்மனை என் குதிரை எங்கோ உருட்டித் தள்ளிவிட்டு வந்திருக்கிறது.
சில நாட்கள் கழித்து-
இளவரசே! மரகதத் தீவின் மன்னர் மன்மதவர்மர் தங்களைக் காண வருவதாகச் செய்தி அனுப்பியிருக்கிறார்.
அப்படியா! அவர் என் தந்தையின் உயிர்த்தோழர் அல்லவா?
ஆமாம். தாங்களே நேரில் சென்று வரவேற்பதுதான் மரியாதை.
அவரை எதிர்கொண்டு அழைத்து வருவதுதான் முறை. நானே கிளம்பறேன்.


இளவரசே! தங்களைக் காண வழியெங்கும் மக்கள் கூடி நிற்பார்கள். அதில் வீரசிம்மனின் ஆட்களும் இருக்கலாம். எதற்கும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும்.
விஷயமறிந்த வீரசிம்மன் மன்மதரின் கூடாரத்துக்குள் நுழைந்தான்.
மன்மதரே, வீணாகக் கூச்சல் போட்டு உயிரை இழக்காதீர்.
இரவு வேளையில், இப்படி வஞ்சகமாகப் புகுந்து கத்தியை நீட்டுவது கோழையின் செயல்...
(தொடரும்)

கூடு கட்டும் கலைஞர்கள்!



பிள்ளை பெற்று வளர்க்கிற காரியத்தில் உலகிலேயே மகா சோம்பேறி குயில்தான்! பேறுகாலம் வரும்போது, கிடைக்கிற காக்கைக் கூட்டில் முட்டையிட்டுப் போய்விடும்: குஞ்சு பொரித்து இரை கொடுப்பது காக்கை! பெற்றது, பெறாதது எல்லாவற்றுக்கும் அதுதான் தாய்!

பொதுவாகக் குயில் தாவர உணவை மட்டுமே உட்கொள்ளும். ஆனால் காக்கைக் கூட்டில், குயில் குஞ்சு பொரித்துப் பிறகு சிறகு முளைத்துப் பறந்து போகிற வரை, வளர்ப்புத் தாய் ஊட்டுகிற புழு பூச்சிகள்தாம் உணவு!

இதைவிட இன்னும் ஒரு வேடிக்கை உண்டு. காக்கைக் கூட்டை விட்டு வெளியே பறந்து போகிற குயில் குஞ்சை அடைக்கலாங் குருவி மாதிரி ஒரு வகை 'மார்ட்டின்' பறவை தத்து எடுத்துக் கொண்டு விடுகிறது. ஆனால் அது பெண் குயிலாக இருக்க வேண்டுமாம்! ஆண் குயில் குஞ்சை அது சீந்துவதில்லை. கௌதம் பட்டாச்சார்ஜி என்னும் பறவையியலார், கவனித்துப் பதிவு செய்தபடி இந்த மார்ட்டின் பறவைகள் குயிலைத் தவிர மற்ற வகைப் பறவைக் குஞ்சுகளை இப்படி தத்து எடுப்பதில்லை!







தூக்கணாங்குருவியின் கூடுகள் அழகானவை. தேங்காய் நார்கள், சிறு குச்சிகள், இலைகள், வேர்கள் என்று அழகாகத் தேடியெடுத்துப் பின்னப்படும்



பறவைகளின் இயல்புகளை ஆராய்ந்து எழுதுகிறவர்கள், அவை கூடமைக்கும் கட்டுமான நேர்த்தியை வைத்து, நெசவாளர்கள், தையல்காரர்கள், கொத்தனார்கள், தச்சு வேலைக்காரர்கள், சுரங்கத் தொழிலாளர்கள்- ஏன், கொள்ளைக்காரர்கள் என்று கூடப் பறவைகளை வகை பிரிக்கிறார்கள்!

மரங்கொத்திப் பறவை, தன்னுடைய உளிமூக்கால் தச்சு வேலை நேர்த்தியில் மரத்தைத் துளைத்துக் கூடமைக்கும். இது விட்டு விட்டுப் போகும் கூடுகளை மைனாக்கள் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. தனியே இவை கூடு கட்டுவதில்லை!





தையல்காரப் பறவை என்றே ஒன்று உண்டு. பெரிய பெரிய இலைகளை அப்படியே இணைத்துக் கூம்பு வடிவில் கூடமைக்கும். இதில் பருத்திப் பஞ்சு, நார் இழைகள், மெலிதான

இந்தக் கூடுகள் மரங்களில் தொங்கிக் கொண்டிருக்கும். பெரிய அளவிலான பீர்க்கங்காய் நார்ப் பத்தை மாதிரி அழகாகத் தோற்றமளிக்கும்.

பூக்கொத்தி, உழவாரப் பறவை போன்ற சிறு பறவைகள், காற்றில் பறந்து வரும் 'தாத்தாப்பூச்சி', எருக்கம் பஞ்சு, மெல்லிய நார்கள், ஒட்டடை போன்றவற்றைச் சேகரித்துப் பனைமரத்தில் மட்டைகளின் இடுக்கில் கூடு கட்டும். தன்னுடைய எச்சிலையே பயன்படுத்தி முட்டைகளையும் கூட்டில் பத்திரமாய் ஒட்டி வைத்து விடும்.



இறகுகள் எல்லாவற்றையும் பரப்பி வைத்துச் சுகம் தேடும்.

தமிழில் 'இருவாயன்' என்று வழங்கப்படுகிற 'ஹார்ன் பில்' பறவை கூடமைப்பதும் குஞ்சு வளர்ப்பதும் படு சுவாரசியமானது. தாய்ப் பறவை, பேறுகாலத்தின் போது, ஒரு மரப் பிளவுக்குள் புகுந்து கொள்ளும். உள்ளே தன்னுடைய கழிவுகளையே பரப்பித் தன்னுடைய மூக்




கையே கொத்தனார்க் கரணையாகப் பயன்படுத்தி தனது முட்டையிடும் அறையைத் தயாரித்துக் கொள்ளும். பிறகு உள்ளே இருந்தபடியே, மரப் பிளவுத் திறப்பையும் கழிவுகளைக் கொண்டு பூசியே குறுகலாக்கி விடும். பாதுகாப்பு வேண்டாமா? அதன் பிறகு ஆண் பறவை 'மனைவி' யைப் பத்திரமாகக் கவனித்துக் கொள்ளும். இரை கொண்டு வந்து, சிறிய பிளவின் வழியே மனைவிக்கு ஊட்டி விடும்.

தேன் சிட்டு போன்ற சிறு பறவைகள் கூடு கட்டுகிற நேர்த்தி வெகு அற்புதமானது. இந்த வகையில் கூடு கட்ட இடம் தேர்வு செய்வது, கூடு கட்டப் பொருள்கள் சேகரிப்பது, கூடமைப்பது எதிலுமே ஆண் பறவை பங்கெடுப்பதில்லை. எல்லாமே பெண் பறவையின் வேலை. கூட்டைத் தொங்க விடத் தகுதியான மரக் கிளையைத் தேர்ந்தெடுத்துக் கன்னா பின்னாவென்று காய்ந்த சருகுகளைச் சேர்த்து முதலில் வெளிப்புறத்தைத் தான் உருவாக்கும். சிறு கிளையில் கூட்டைத் தொங்க விடுவதற்கும் சிலந்தி வலை இழைகளையே தாராளமாக எடுத்துச் சேர்த்துப் பயன்படுத்தும். கிட்டத்தட்டப் பதினைந்து செ.மீ. நீளத்துக்கு நான்கு நாட்கள் அரும்பாடு பட்டு அமைக்கும் இந்தக் கூட்டை வெளியேயிருந்து பார்த்தால் பறவைக் கூடு மாதிரியே தெரியாது. ஏதோ குப்பைக் கூளம் போலிருக்கும். ஒரு சிறிய திறப்பை விட்டு விட்டு, உட்புறம் போய் அமர்ந்து கொண்டு மிருதுவான நார்கள், பஞ்சு இழைகள், எல்லாம் போட்டுப் பட்டுப் போன்ற மென்மையோடு குஞ்சு பொரிக்கும் அறையைத் தயாரிக்கும்.

கடல்வாழ் பறவைகள் பாறை இடுக்குகளையே தமது இருப்பிடமாக்கிக் கொள்கின்றன. கூடமைக்கிற சிரமத்தை அவை எடுத்துக் கொள்வதில்லை. வைக்கோல், பஞ்சுப் பட்டை, துடைப்பக்குச்சி போன்றவற்றை எடுத்து வீட்டுக் குருவிகள் கூடமைப்பதை இப்போதெல்லாம் அதிகம் பார்க்க முடிவதில்லை.

மானாவாரியாக மரங்களையெல்லாம் வெட்டிக் காடுகளை அழித்து வெறுமையாக்கிக் கொண்டிருக்கிறோம். பறவைகளைக் காப்பாற்றுவதற்காக எதிர்காலத்தில் 'கூடு மாற்று வாரியங்கள்' ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை. இருந்தாலும் மண் குடிசையின் நேர்த்தி மாடமாளிகைகளில் கிடைக்குமா?

— சுப்ர.பாலன்



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

1. என்ன சத்தம்?

ஆவல் தேங்கிய முகத்துடன் நால்வரும் அடிக்கடி சாலையை எட்டி எட்டிப் பார்த்த வண்ணம் நின்றிருந்தனர்.

முத்துக்குமார் தனது கடிகாரத்தை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான். "மணி என்னடா ஆச்சு?" என்றான் பழனி.

"பஸ் வர்ற நேரம்தான்" என்றான் முத்து. தூரத்தில் பேருந்து வரும் இரைச்சல் கேட்டது. அது அவர்களுக்குச் சுக மான இசையாகவே இருந்தது. புளியந் தோப்பு முக்கில் பேருந்து திரும்பும்போது எழுந்த ஹாரன் ஒலி கேட்டதும் சாலையில் பாயாத குறையாய் எட்டிப் பார்த்தான் செந்தில்.

"ஏய் சும்மா நில்லுடா. பஸ் வந்து நிற்கத் தானே போகுது" என்றான் சிட்டழகு.

அவர்களின் ஆர்வத்தை அதிகம்



சோதிக்காமல் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்து நின்றது பேருந்து. அவர்களைத் தாண்டிப்



சின்னமனூர் சின்னப்பட்டாளம்

ரா.சுந்தரமூர்த்தி

போய் சுமைதாங்கி அருகே நின்ற பேருந்து பின்னால் ஓடினார்கள் அனைவரும்.

எல்லார் கண்களும் பேருந்தின் படிக்கட்டில் இருந்தது. கிட்டான் பேருந்தில் இருந்து வெளியே குதித்தான்.

கிட்டான் என்ற கிருஷ்ணமூர்த்திக்காகத்தான் இவ்வளவு நேரமும் அவர்கள் காத்திருந்தார்கள். அவனைக் கண்டதும் அவர்கள் முகத்தில் ஏக மகிழ்ச்சி. வேறு யார் வந்தார்கள் யார் ஏறினார்கள் என்றெல்லாம் யாரும் கவனிக்கவில்லை.

செந்தில் அருகில் போய் அவனது பையை வாங்கிக் கொண்டான்.

மாவட்ட அளவிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பெற்று வர மாவட்டத் தலைமையிடமான தஞ்சாவூர் போய் விட்டுத் திரும்பி வரும் கிட்டானுக்குத்தான் இத்தனை வரவேற்பு.


“எப்படிடா இருந்தது விழாவெல்லாம்?” முத்துக்குமார் கேட்டான்.

“அதற்கென்ன ரொம்ப அருமையாக நடந்தது. என்னைக் கூட்டிட்டுப்போன ட்ரில் மாஸ்டருக்குத்

தான் ஏக மகிழ்ச்சி. எல்லோரும் கை கொடுத்து நம் பள்ளியின் பெருமையைத்தான் பாராட்டி னாங்க" என்றான் கிட்டான்.

"சார் எங்கேடா?" என்றான் செந்தில்.

"அவர் முதல் நிறுத்தத்தில் இறங்கிப் போய் விட்டார்."



"சரி. வாங்க போகலாம்." என்றபடி எல்லோரும் அவரவர் சைக்கிளில் ஏறினர்.

மெயின் ரோட்டில் இருந்து 2 மைல் உள்ளே தள்ளியிருந்த தங்கள் ஊரான சின்னமனூரை நோக்கி உற்சாகமாக சைக்கிளை மிதித்தனர். கிட்டான் எல்லோரிலும் பெரியவனான முத்துக் குமார் சைக்கிளின் கேரியரில் தாவி ஏறினான்.

"கப்பிச்சாலை மழை பெய்ததில் குண்டும் குழியுமாகக் கிடக்கு. அதனால் சைக்கிளைப் பார்த்து ஓட்டுங்க. எல்லாத்தையும் வீட்டில் போய் பேசிக்கலாம்" என்றான் கிட்டான்.

ஒரு ஊர்வலம் போல் நால்வர் சைக்கிளும் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றன. கடைசியாக வந்து கொண்டிருந்தாள் சிட்டழகு.

சாலையின் ஒரு புறம் சலசல என பெரிய குத்தகை வாய்க்கால் ஓடிக் கொண்டிருந்தது. மறுபுறம் தோப்பும் துரவுமாக எங்கும் பச்சைப் பசேல் என மரங்கள் அடர்ந்திருந்தன. நல்ல கோடையான போதும் சிலுசிலுவென்ற காற்றும் மரங்களின் நிழலும் வெம்மையைத் தணித்து இதமளிப்பதாக அமைந்திருந்தது.

"அண்ணா, நில்லுங்க ஒரு நிமிடம்" சிட்டழகு குரல் கொடுத்தாள். எல்லா சைக்கிள்களும் சட்டென கிரீச்சிட்டு 'ப்ரேக்' அடித்தன.

கால் ஊன்றி நின்றபடியே திரும்பிப் பார்த்த நண்பர்கள் "என்ன சிட்டழகு?" என்ற வினா வோடு திகைத்தனர்.

"பக்கத்தில் வாங்க சொல்றேன்" என்று பக்கத்தில் அழைத்தாள் சிட்டழகு.

சிறு வட்டமடித்துக் கொண்டு அவளிடம் சென்றனர். "சரி சொல்லு ஏன் கூப்பிட்ட?"

"கொஞ்சம் கவனமா கேளுங்க..."

"எதை?"

"ஏதோ பரிதாபமாக ஒரு சத்தம் கேட்கலை?"

"என்ன உளறறே?"

"கேளுங்கப்பா..."

தூரத்தில் இருந்து மிகவும் பரிதாபமாகக் கேட்டது ஒரு பூனையின் குரல்.

முத்துக்குமார்தான் சொன்னான், "ஆமாம் பூனை குரல் மாதிரி இருக்கு..."

"ஆமாம். குளிரில் நடுங்குகிற மாதிரி இருக்கு" என்றான் செந்தில்.

"எந்தச் சத்தம் கேட்டால் நமக்கு என்னடா? வாங்க வீட்டுக்குப் போகலாம்" என்றான் பழனி.

அவனுக்கு ஒரு பட்டப்பெயர் உண்டு. அது தான் 'உதாரணம்.' அதன் காரணத்தை அப்புறம் பார்ப்போம்.

எல்லோரும் அவனை ஒரு மாதிரியாக முறைத்தனர்.

உதாரணம், தலையைக் குனிந்து கொண்டு சொன்னான் : "அங்கே இங்கே சுத்தாமல்,



போனோமா வந்தமான்னு இருக்கணும்னு அப்பா சொல்லி இருக்கார்..."

"சரி நீ வேணா போயிக்கோ" எரிச்சலுடன் சொன்னான் முத்துக்குமார்.

"முத்து அவனை ஏண்டா கோவிச்சுக்கிற? அவன் குணம் தெரிந்தது தானே. உதாரணம் நீ வீட்டுக்குப் போடா. நாங்க பின்னாடி வர்றோம்" என்றான் கிட்டான்.

அதற்குள் சிட்டழகும், செந்திலும் சைக்கிளை நிறுத்திவிட்டு, சத்தம் கேட்ட திசையை நோக்கி நடக்கத் தொடங்கியிருந்தனர்.

உதாரணம் தயங்கியபடி நின்றான்.

"ஏய். உன்னைத் தான் போகச் சொல்லியாச் சுல்ல" என்றான் முத்து.

"ஏண்டா யோசிக்கற?" என்றான் கிட்டான்.

"நானும் வர்றேன், உங்ககூட." பழனியும் சைக்கிளை ஸ்டாண்டு போட்டு நிறுத்தினான்.

எல்லோரும் பூனை கத்தும் திசை நோக்கி மாந்தோப்புக்குள் இறங்கி நடக்கத் தொடங்கினர். காலில் மாவிலை சருகுகள் மொற மொற என்று நசுங்கி ஒலி எழுப்பின. குட்டையான மாமரங் களில் கொத்தாகத் தொங்கும் மாங்காய்கள் கைக்கு எட்டும் தூரத்தில் இருந்தும் யாருக்கும் அதன் மீது இப்போது கவனம் செல்லவில்லை.

பூனை சத்தம் கேட்கும் இடத்தை நோக்கி காதைக் கூர்மைப்படுத்திக் கொண்டு நடக் கத் தொடங்கினர். பூனையின் பரிதாபக் குரல் அவர்களைப் பர பரப்பாக்கிக் கொண்டிருந்தது. நடையை வேகப்படுத்திக் கொண்டு தோப்பைத் தாண்டி னார்கள்.

தோப்பை அடுத்த திடலில் புதர் மண்டிக் கிடந்தது. பூனையின் சத்தம் கேட்கிறதே தவிர அது இருக்கும் இடம் தெரியவில்லை.

சிட்டழகும் செந்திலும் புதர் செடி களை விலக்கிப் பார்த்தனர். ஊஹூம். பூனை தென்படவில்லை.

கிட்டான் சொன்னான் : "பூனை இங்கே இல்லை. சத்தம் தூரமாத்தான் கேட்குது."

ஆனால் யாருக்கும் மேலும் தேடிப் போக விருப்பமில்லை. காரணம் அய்யனார் கோயில். புதர் திடலின் ஓரமாக உயர்ந்திருந்தது மணல் மேடு, அதனைத் தாண்டினால் அய்யனார் கோயில் வந்து விடும். அய்யனாரும் சரி, அவரது பரிவார தெய்வங்களும் சரி பார்க்கப் பயங்கர மாகத் தோற்றமளிப்பார்கள்.

"கிட்டான், சத்தம் அய்யனார் கோயில் பக்கத் தில் இருந்து வருகிறதோ?" என்று சந்தேகத்தைக் கிளப்பினான் முத்துக்குமார்.

"அப்படித்தான் நினைக்கிறேன்" என்றான் கிட்டான்.

"அங்கெல்லாம் வேண்டாம்டா, திரும்பிடலாம்" என்றான் உதாரணம்.

சிட்டழகும் செந்திலும் "அதுசரி திரும்பிட லாம்" என்று அவசரப்பட்டனர்.

செந்திலுக்கும் அய்யனார் சிலையை நினைத்ததும் உடல் பயத்தில் சிலிர்த்தது.

அதற்குள் நான்கைந்து பெரியவர்கள் வந்து விட்டனர். "என்ன தம்பிகளா தேடுறீங்க?" என்றார் ஒரு பெரியவர்.

"ஐயா, ஒரு பூனைச் சத்தம்" என்று இழுத்தான் கிட்டான்.

"ஆமாம். நாங்ககூட அதைத் தேடித்தான் வந்தோம். அதோட பரிதாபமான சத்தத்தைக் கேட்டுக்கிட்டு வயல் வேலையைக் கவனிக்க முடியலை. கிணத்தில் கிடந்து கத்துது. அந்தச் சனியனை வெளியே தூக்கிப் போட்டாத்தான் நிம்மதி" என்றார் ஒரு பெரியவர்.

"இங்கே கிணறு எங்கே இருக்கு?" என்றான் முத்துக்குமார்.

"பக்கத்தில் அய்யனார் கோயில் பின்னாடி இருக்கு" என்றபடி புதர் நடுவே ஓடிய ஒற்றையடிப் பாதையில் நடந்தனர்.

மணல் மேட்டைத் தாண்டியதும் மிகப் பெரிய திறந்த வெளியில் அய்யனார் கோயில். புதிசும் பழசுமாகப் பெரிய, சின்ன குதிரைகள். அவற்றிற்கு மத்தியில் இருந்தது அய்யனார் கோயில்.

மனதில் ஒரு பக்கம் பயமிருந்தாலும் எல்லோரும் துணிந்து கோயில் பக்கம் வந்து விட்டனர். கிணறு கோயில் பின்னால் இருந்தது. கிணற்றைச் சுற்றி பாறை பெயர்ந்து இடுக்குகளில் செடிகள் முளைத்து வளர்ந்திருந்தன. பூனை சத்தம் மட்டுமே அந்த இடத்தில் கிணறு இருப்பதைக் காட்டிக் கொண்டிருந்தது.

கிட்டான் செடிகளை விலக்கிக் கொண்டு கிட்டே போனபோது பெரியவர் தடுத்தார். "தம்பி, பார்த்துப்பா. பாழுங்கிணறு. முகட்டில் மண் சரிந்து விடப் போகிறது."

"சரிங்க ஐயா" என்ற கிட்டான் காலை அழுத்தி ஊன்றிப் போனான். அவன் நண்பர்களும் அவனைத் தொடர்ந்தனர். எல்லோரும் கிணற்றை எட்டிப் பார்த்தனர்.

உதாரணம் மட்டும் எட்டியே நின்றான். அவனுக்கு அய்யனார் கோயில் குதிரை ஒன்று தன்னை நோக்கிப் பாய்வதாகப் பட்டது. பயத்துடன் பார்வையைத் திருப்ப முயன்றான்.

பூனை நன்றாக நனைந்து இருந்தது. நீர் மட்டத்தில் துருத்திக் கொண்டிருந்த கல்லைப் பிடித்துக் கொண்டு கத்தியது. அடிக்கடி உடலைச் சிலிர்த்துக் கொண்டதால் அதன் முடிகள் குத்திட்டு நின்றிருந்தன.

"என்னடா செய்யறது?" என்றான் முத்து. "பூனையைக் காப்பாத்தியே ஆகணும்" என்றாள் சிட்டழகு.

"அதுக்குத்தானே வந்திருக்கோம். நகருங்க அந்தப் பக்கம்" என்றபடி பக்கத்தில் இருந்தவர் வைத்திருந்த நீண்ட கழியை வாங்கிக் கிணற்றில் விட்டார் ஒரு பெரியவர். அக்கழியின் நுனியில் ஒரு கோணிசாக்கு கட்டப்பட்டிருந்தது.

கழியைப் பூனையின் பக்கம் நீட்டிய போது, அது பயந்து போய் நீரில் விழுந்து நீந்தியபடியே கத்தியதே தவிர கழிப்பக்கம் வரவேயில்லை.

அதற்குள் அய்யனார் கோயில் முன் பக்கமிருந்து நான்கு ஐந்து பேர் ஓடி வந்தனர். முரட்டு மீசையுடன் வாட்டசாட்டமாக இருந்த அவர்கள், கிணற்றைச் சுற்றி நின்றிருந்தவர்கள் மீது எரிந்து விழுந்தனர். "என்ன பண்றீங்க இங்கே?" என்று கத்தினர்.

கிட்டான் கிணற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுதுதான் சட்டென அவன் கண்ணில் பட்டது அந்த முடிச்சு.

கிட்டானின் கையைப் பிடித்து தூரத் தள்ளிய மீசைக்காரன் ஒருத்தன், "போங்க எல்லோரும் இங்கிருந்து" என்று கத்திக்கொண்டே, கிணற்றில் கழி விட்டிருந்த பெரியவரிடமிருந்து கழியைப் பிடுங்கி தூர எறிந்துவிட்டு, "என்ன நடக்குது இங்கே?" என்று அதட்டினான்.

பெரியவர் 'பூனை' என்று இழுத்தார். "எல்லாம் நாங்க பார்த்துக்கிறோம். புறப்படுங்க முதல்ல" என்றான் மீசைக்காரன்.

"சரி, வாங்க போகலாம்" என்று அவர்களிடம் நின்று பேச விரும்பாதவர்களாய் எல்லோரும் திரும்பினர்.


கிட்டானுக்குக் கிணற்றில் கிடக்கும் முடிச்சு என்ன என்பதிலேயே நினைவு ஓடியது.


– தொடரும்

"ராமு, நேற்று நான் ஒரு மிருகத்தைப் பார்த்தேன். அதுக்கு மூணு கால், ஒரு கண், ரெண்டு வாய், ஆறு காது இருந்துச்சுடா! இதுவரைக்கும் இப்படி ஒரு மிருகத்தை நான் பார்த்ததே கிடையாது!"

"அப்பாடா! கடைசியிலாவது உண்மையை ஒத்துக்கிட்டியே!"

-ஆர். பிரசன்னா, கரூர்





உழைப்பும் உயர்வும்!

ராமு, சோமு என்று இரு நண்பர்கள் இருந்தனர். இருவரும் வேலை தேடி அந்த நாட்டு மன்னரின் அரண்மனைக்குச் சென்றனர். இருவருக்கும் அரசர் தன் தோட்டத்தைப் பார்த்துக் கொள்ளும் வேலையைக் கொடுத்தார். தோட்டத்தில் செடிகளுக்குத் தினமும் தண்ணீர் பாய்ச்சுவது, களை எடுப்பது, புதிய செடிகள் வைப்பது, உரமிடுவது என தோட்ட வேலைகள் அனைத்தும் இருவரது வேலையாயிருந்தது.

நாட்கள் நகர்ந்தன. அரசர் இருவரது வேலையையும் அவ்வப்போது கவனித்து வந்தார். ஒருநாள் அரசர் ராமுவின் சம்பளத்தை மட்டும் உயர்த்தினார். இதைக் கண்ட சோமுவிற்கு வருத்தம் ஏற்பட்டது. இருவரும் ஒன்றாகத்தானே வேலைக்குச் சேர்ந்தோம். இருவரும் ஒரே மாதிரியான வேலையைத் தானே செய்து வருகிறோம். அரசர் ஏன் ராமுவிற்கு மட்டும் சம்பளத்தை அதிகரித்துள்ளார் என்று தனக்குள் கேட்டுக் கொண்டான் சோமு. ஆனால் அரசரிடம் இது பற்றி கேட்க அச்சமாக இருந்தது.

ஒருநாள் அரசர் தோட்டத்தில் நடந்துக்கொண்டே செடி, கொடிகளைப் பார்த்து வந்தார். இதுதான் சமயம் என்று எண்ணி சோமு அரசரிடம், ''மன்னா நானும் ராமுவைப் போல கடுமையாகத்தான் உழைக்கிறேன். ஆனால் அவனுக்குச் சம்பளத்தை உயர்த்தியுள்ளீர்கள். எனக்குச் சம்பளத்தைக் கூட்டவில்லையே ஏன்?'' என்று கேட்டான். அந்தச் சமயத்தில் சாலையில் மேளச்சத்தம் கேட்டது.

அரசர் உடனே சோமுவிடம் ''என்ன சத்தம் போய் பார்த்துவிட்டு வா'' என்று ஆணையிட்டார். போய் விட்டு வந்த சோமு ''மன்னா! திருமண ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறது'' என்றான். ''யாருடைய கல்யாணம்?'' இது அரசரின் கேள்வி. திரும்பவும் போய் விசாரித்தான் சோமு. ''மன்னா! இந்த ஊர் ஜமீன்தார் மகனுக்குத் திருமணம்'' என்றான் சோமு. ''யார் வீட்டிலிருந்து பெண் எடுத்திருக்கிறார்கள்?'' இது அரசரின் அடுத்த கேள்வி. திரும்பவும் வாசலுக்கு ஓடினான் சோமு. ''அரசே! இன்னொரு

ஜமீன்தாரின் மகள்தான் மணப்பெண்ணாம்!'' என்று பதில் அளித்தான் சோமு. சரி! என்று செல்லிவிட்டு மன்னர் ராமுவைக் கூப்பிட்டார்.

தோட்டத்தில் செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டு கடமையே கண்ணாக இருந்த ராமு அரசர் கூப்பிட்டதும் வேகமாக ஓடி வந்தான். ''ராமு! வாசலில் ஏதோ மேளச் சத்தம் கேட்கிறது. என்ன என்று போய்ப் பார்த்து விட்டு வா'' என்றார் அரசர். அரசரின் இந்த நடவடிக்கை சோமுவுக்கு வியப்பாக இருந்தது. என்னை அனுப்பி பதில் வாங்கிக் கொண்டு விட்டு இந்த ராஜா ஏன் மறுபடியும் ராமுவை அனுப்புகிறார் என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

சில நிமிடங்களில் திரும்பி வந்த ராமு, ''அரசே! அது கல்யாண ஊர்வலம். இந்த ஊரில் இருக்கும் ஜமீன்தாரின் மகனுக்கும் பக்கத்து ஊரில் உள்ள ஜமீன்தாரின் மகளுக்கும் திருமணம்'' என்று பதில் சொல்லிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றான்.

அரசர் சோமுவின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினார். ''சோமு, இப்போது புரிந்ததா! நான் ஏன் ராமுவிற்கு ஊதியத்தை உயர்த்தினேன் என்று. நான் கேட்ட கேள்விக்கு ஒரே தடவையில் அவன் விவரமாகப் பதில் அளித்தான். அது மட்டுமல்லாமல் உடனே தன் கடமையைக் கவனிக்கச் சென்று விட்டான். ஆனால் நீ என்ன செய்தாய்? மூன்று தடவை போய் போய் வந்தாய்'' என்று அரசர் சொன்னதும் சோமு தன் தவறை உணர்ந்தான். வெட்கி தலை குனிந்தான். அதன்பிறகு வேலையில் அதிக நாட்டத்தோடு உழைத்தான். அறிவோடு செயல்பட்டான். ராமுவைப் போலவே சம்பளமும் கிடைக்கப் பெற்றான்.

- ஆர். சாரதா,
சென்னை.

புதிர் உலக விடைகள்

1) ரகு திங்கட்கிழமை

பெற்ற கூலி		= ரூ. 8
செவ்வாய்	(8 + 6)	= ரூ. 14
புதன்	(14 + 6)	= ரூ. 20
வியாழன்	(20 + 6)	= ரூ. 26
வெள்ளி	(26 + 6)	= ரூ. 32
மொத்தம்		= ரூ 100



II(a) இரண்டு அப்பா, இரண்டு பையன்கள், உண்மையில் மூன்று பேர்தான்.

ஒரு மகன், அவன் அப்பா, அப்பாவின் அப்பா!

II(b) விடை: இரண்டு நண்பர்களை ஒரே சமயத்தில் அழைத்துச் செல்வதுதான் செலவு குறைவு. ஒரு நண்பனை இரண்டு முறை அழைத்துச் செல்ல உங்களுக்கும் சேர்த்து 4 டிக்கெட் எடுக்க வேண்டும். இரண்டு நண்பர்களை அழைத்துச் செல்லும்போது உங்களுக்கும் சேர்த்து 3 டிக்கெட் எடுத்தால் போதுமே!


III) ராமு வயது - 14
திருப்பிப் போட்டால் அம்மா வயது - 41
இரண்டும் சேர்ந்தால் = 41+14 = 55
ராமு வயதில் பாதி 7,
அப்படியானால் அப்பா வயது
41+7 = 48
(55-48) தங்கை வயது 7

IV) 1. பச்சையம் 2. பாண்டவர்கள் 3. பிரளம்பா சூரன் 4. பீஹார் 5. புறா 6. புட்டோ 7. பெரியார் 8. பேஸ்மேக்கர் 9. பைராம்கான் 10. பொன்னையாப் பிள்ளை 11. போபால் 12. பௌர்ணமி

பசி

படம் : சேகர்

கதை : எஸ்.துர்கா காதியாயனி, பத்தாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.




வாயுக்களைக் கண்டறிந்தவர்!

அந்தச் சிறுவனுக்கு அப்போது வயது ஏழு... தந்தை காலமானதும் அடைக்கலம் தந்தவள் அத்தைதான்.

அத்தை மிகவும் நல்லவள். சுட்டிச் சிறுவனை அவன் போக்கில், சுதந்திரமாய் இருக்க அனுமதித்தாள். இளம் வயதிலேயே அபார அறிவுடன் விளங்கினான் சிறுவன். இத்தாலி, ஜெர்மன், அரபு ஆகிய மொழிகளை ஆர்வத்துடன் கற்றான்.

காலங்கள் சென்றன...



அத்தைக்குப் பாரமாக இருப்பது வேதனை அளித்தது அவனுக்கு. சுயமாக ஏதாவது வேலை தேடலாம் என்ற எண்ணம் அரித்தது. செயல்படத் துவங்கினான்...

இங்கிலாந்தின் லீட்ஸ் நகரில் அந்த இளைஞன் மதகுருவாகத் தன் பணியைத் துவக்கினான். மாதா கோவிலில் அவனுக்கு மிகக் குறைவான சம்பளம் தான் கிட்டியது. வாழ்க்கையைத் தள்ளுவதே மிகவும் சிரமமாய் இருந்தது.

தன் குடியிருப்பைச் சாராய ஆலை ஒன்றின் அருகில் அமைத்துக் கொண்டான். அந்த ஆலையிலிருந்து வெளியேறும் துர்நாற்றம் ரொம்பவே அவனை வதைத்தது. அதே சமயம், இளைஞனின் மூளை செல்கள் துர்நாற்றம் தரும் அந்த காற்றைப் பற்றி அறிந்து கொள்ள துடித்தன.

சாராய ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரிலிருந்து கிளம்பும் - அந்தத் துர்நாற்றம் பிடித்த காற்றை அவசியம் பரிசோதனை செய்ய வேண்டுமென்று முடிவு செய்தான்.

குடுவைகளோடு சென்று, அதில் காற்றை நிரப்பிக் கொண்டு திரும்பினான். எரியும் சுள்ளிகளைக் காட்ட... அவை அணைந்தன.

'வாயுக்கள்' பற்றிய நூல்களைத் தேடித் தேடி அலைந்தான். தன் சோதனைச் சாலையிலும் அத்தகைய காற்றை உருவாக்கிட முடியும் என்கிற நம்பிக்கை சுரந்தது. அடுத்து - வாயுக்களை நீரில் கரைத்துப் பார்க்கும் முயற்சியை மேற்கொண்டான். கரைந்தது! சந்தோஷமடைந்தான்.

தான் கண்டறிந்த அந்தக் காற்றிற்குப் பெயர் சூட்ட விரும்பினான். தனக்குத் தெரிந்த மொழியில் 'ஃப்லோஜிஸ்டான்' என்று பெயரிட்டான். (அதவாது ஹைட்ரஜன் நீக்கப்பட்ட காற்று.)

தன் கண்டுபிடிப்பை 'ராயல் சொசைட்டி'க்குத் தெரிவித்தான்.

தான் கண்டறிந்த காற்றுதான் 'கார்பன் டை ஆக்ஸைடு' என்பது அந்த இளைஞனுக்குத் தெரியாது.

ஏழை விஞ்ஞானியின் அளப்பறிய கண்டுபிடிப்பை 'ராயல் சொசைட்டி' ஏற்றுக் கொண்டதோடன்றி, தங்கப் பதக்கம் வழங்கி

கௌரவித்தது. அந்த இளைஞன் ஏற்கனவே, 'மின்சாரத்தின் வரலாறும் இக்கால நிலையும்' என்கிற பெஞ்சமின் பிராங்கிளினின் கண்டு பிடிப்பு பற்றி எழுதிய நூலிற்காக பாராட்டி, சங்க உறுப்பினராக்கிக் கொண்டது.

ஃபிரெஞ்சு அரசு இளைஞனுக்கு விஞ் ஞான அகாடெமியில் உறுப்பினர் அந்தஸ்து வழங்கி சிறப்பித்தது.

வறுமையின் கிடுக்கிப் பிடியில் சிக்கித் தவித்த அந்த இளைஞனை 'ஷெல்பர்ன் பிரபு' ஆண்டிற்கு 250 பவுண்ட் சம்பளத் துடன் தம் நூல் நிலையத்திற்குத் தலைவ ராக நியமித்துக் கொண்டார்.

அந்த இளைஞன் இன்னும் உச்சிக்குப் போக பரிசோதனைக் கூடம் தம் செலவில் அமைத்து தந்தார்.

மிகுந்த புலமையும், அரசியல் ஆர்வமும் கொண்ட ஷெல்பர்ன் பிரபுவின் தொடர்பும், அவர்தம் உதவியும் இளைஞனின் விஞ்ஞானப் பசியை மேலும் தூண்டலாயிற்று. முழு மூச்சாய் ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் பலனாய் 'குறைவிலா வாயு' கண்டு பிடிக்க லானான்.

ஷெல்பர்ன் பிரபுவுடன் ஃபிரான்ஸ் சென்ற போது 'ஆண்ட்வான் லவாஸ்யே' என்னும் புகழ்பெற்ற விஞ்ஞானியைக் காணும் சந்தர்ப்பம் அந்த இளைஞனுக்குக் கிட்டியது.

லவாஸ்யேதான், இளைஞர் கண்டுபிடித்த வாயு ஒரு தனி மூலகம்; அதி அற்புதமானது என உணர்த்தினார். அதற்கு ஆக்ஸிஜன் எனப் பெயரிட்டதும் அவர்தான்.

'ல்யூனர் சொஸைட்டி' என்பது 'ஜோஸையா வெட்ஜ்வுட், ஜேம்ஸ் வாட், 'எராஸ்மஸ் டார்வின்' போன்ற மிகப் பெரும் விஞ்ஞானிகளை உறுப்பினராகக் கொண் டது. அந்த வரிசையில் அந்த இளம் விஞ்ஞானிக்கும் இடம் கிடைத்தது. அவன் வேறு யாருமல்ல. 'ஜோசப் பிரீஸ்ட்லி'தான்.

பிரீஸ்ட்லியால் ஆராய்ச்சிகளைத் தொடர முடியாமல் போயிற்று. காரணம் - ஃபிரெஞ்சுப் புரட்சி..!

ஃபிரெஞ்சுப் புரட்சியின் மையக் கருவான 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற கோஷம் பிரீஸ்ட்லியை மிகவும் கவர்ந்தது.

ஆதலால், பிரஞ்சுப் புரட்சியாளர்களை ஆதரித்து இவர் பேசவும், எழுதவும் ஆரம் பித்தார்.

ஆட்சியாளர்கள் பிரீஸ்ட்லி வீட்டைச் சிதைத்தார்கள். இருபது ஆண்டுகள் அரும் பாடுபட்டு செய்த ஆராய்ச்சி குறிப்புகள் புழுதியில் கிழித்தெறியப்பட்டன.

பிரீஸ்ட்லி 'பென்சில் வேனியாவில்' தங்கி இருந்த சமயம் - கார்பன் மோனாக்ஸைடைக் கண்டறிந்தார். கார்பன் எரியும் போது அதற்குத் தேவையான ஆக்ஸிஜன் கிடைக்காமல் குறைவாக இருக்குமானால் கார்பன்டை ஆக்ஸைடுக்குப் பதிலாக கார்பன் மோனாக்ஸைடு உற்பத்தியாகிறது என்பது இவர் நிரூபித்த உண்மை.

சிரிக்கும் வாயுவான நைட்ரஸ் ஆக்ஸைடு கண்டு பிடித்ததும் பிரீட்ஸ்ட்லி தான்.

சொந்த ஊர் இங்கிலாந்தில் உள்ள லீட்ஸ் நகரம். பிறந்தது 1733 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் தேதி. இயற்கையிலே இவர் ஒரு திக்குவாயர். தமது 70 வயது வரை அமெரிக்காவிலேயே வாழ்ந்து 1804ஆம் ஆண்டு காலமானார்.

- குறிஞ்சிச் செல்வி



ஐஸ்கிரீம்

கோன் ஐஸ்கிரீமைச் சுவைத்துச் சாப் பிடுகிறோமே, அந்தக் கோனைக் கண்டுபிடித் தவர் யார் தெரியுமா? அந்தோனியா ஆஸ்கி என்பவர். இத்தாலியைச் சேர்ந்த இவர் இங்கி லாந்தில் அகதியாய்ப் போய்ச் சேர்ந்தார். இவர் ஒரு ஐஸ்கிரீம் பித்தர். ஏழை எளியவர்களும் கூட எளிதில் ஐஸ்கிரீமைச் சாப்பிடும் வண் ணம் ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும் என்ற வெறியில் உருவானதுதான் wafer பிஸ்கட்.

அந்த wafer-ல் உருவாவதுதான் கோன்.


- ஏ.கே. நாசர்

கூடு விட்டுக் கூடு பாயும் கலையைக் கற்க பிரதாபன் என்ற கந்தர்வன் பார்க்கவ முனிவரிடம் சீடனாகச் சேர்ந்தான். ஒருநாள் காட்டில் விறகு வெட்டிக்கொண்டு வந்து ஆசிரமத்தில் போட்ட பின் குருபத்தினி அழைத்தாள்.

துவைத்த துணிகளைக் கொடுத்து ''காயப் போடு'' என்றாள். சுற்று முற்றும் பார்த்த பிரதாபன் ''எங்கே காயப் போடுவது?'' என்றான். ''என் முதுகில் வை'' என்றாள் சினத்தோடு. அவன் அவள் முதுகில் வைத்தான்.

குருபத்தினி கோபத்தோடு தன் கணவரிடம் போய், ''இந்தப் பிரதாபனுக்குத் திமிர் அதிகம். உங்கள் துணிகளை நானே துவைத்து விட்டேன். உலரப் போடச் சொன்னால் எங்கே உலர்த்துவது என்று கேட்டான். ஆசிரமத்தைச் சுற்றி எத்தனை மரங்கள், பாறைகள்? அங்கே காயப் போடத் தெரியாதா? எரிச்சலோடு

100 படி நெல், கடன்



முதுகில் உலர்த்து என்றேன். முதுகில் வைத்து விட்டுப் போனான். அத்தனையும் மறுபடி மண்ணில் விழுந்துவிட்டது. அவனைக் கூப்பிட்டு கண்டித்து வையுங்கள்'' என்றாள்.

பார்க்கவர் சுற்றுமுற்றும் பார்த்தார். பிரதாபன் யோகத்தில் ஆழ்ந்திருந்தான். ''தியானம் கலைந்த பிறகு கண்டிக்கிறேன்'' என்று மனைவியிடம்

ஆர். பொன்னம்மாள்



கூறினார்.

யோகம் கலைந்ததும் பிரதாபனிடம், ''ஏன் இப்படி செய்தாய்?'' என்று கேட்டார்.

''குருநாதா! ஆசிரமத்தைச் சுற்றி அத்தனை தெய்வங்களும் பூஜை முடிந்து நீங்கள் தரும் நைவேத்தியத்துக்காகக் காத்திருக்கிறார்கள். பாறை, மரக்கிளைகள் எங்கும் தேவதைகள்! நான் எங்கே காயப் போடுவது? அதனால்தான் கேட்டேன். அன்னையார் 'என் முதுகில் போடு' என்றார்கள். அங்கே எந்தத் தெய்வமும் இல்லை. மொத்த துணியையும் முதுகில் காயப் போட முடியுமா? அப்படியே வைத்து விட்டேன்'' என்றான் இயல்பாக.

பார்க்கவர், ''நீ சொல்வது நிஜமா? ஆசிரமத்தைச் சுற்றி இத்தனை தெய்வங்கள் இருந்தனவா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.


''சத்தியமாக! நான் பிரம்மா, சரஸ்வதி, விஷ்ணு, சிவன், அம்பிகை, யமன், காயத்ரி தேவி இத்தனை பேரையும் பார்த்தேன்'' என்றான் சீடன்.

''சரி. நீ சொல்வதை நான் நம்புகிறேன். அவர்கள் ஏதாவது பேசிக் கொண்டார்களா?'' என்று கேட்டார் முனிவர்.

''பேசிக்கொண்டார்கள். அதை வெளியிட்டால் நான் இறந்து விடுவேன்'' என்றான் பிரதாபன்.

''சொல்லாவிடில் நீ சொன்னதெல்லாம் பொய். என்





''ஏண்டா ராமு, இனிமேல் ரப்பரே வாங்கக் கூடாதுன்னு சொல்ற?''

''ஒரு விஷயத்தை அழிக்கணும்ங்கிற எண்ணமே மனசுல வரக்கூடாதுன்னு டீச்சர் சொன்னாங்களே!''

- ஹ.பரத், தஞ்சை

கைக்கடிகாரங்கள் யாருக்கு?



பிப்ரவரி இதழில் அறிவித்துள்ள போட்டியில் நிறைய பேர் கலந்து கொண்டனர். சரியான விடை எழுதியவர்களில் இருந்து இருவர் பரிசுக் குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு பெற்றவர்கள் :

1. பி.சுபாஷினி, நான்காம் வகுப்பு, டி.வி.எஸ். மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மதுரை
2. கே.கோவிந்திலக், பதினோராம் வகுப்பு, தேசிய மேல்நிலைப் பள்ளி, நாகப்பட்டினம்.

சரியான விடை :

ஒடிசி - ஒரிசா
குச்சுப்புடி - ஆந்திரா
மோகினி ஆட்டம் - கேரளா
பாங்கரா - பஞ்சாப்
யக்ஷகானம் - கர்நாடகம்
தாண்டியா - குஜராத்

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

மனைவியை அவமதித்தாய் என்று நான் சாபமிடுவேன்! எது உகந்தது?'' என்று கேட்டார் ரிஷி.

குரு சாபத்தைவிட மரணமடைவதே மேல் என்று முடிவு கட்டினான் பிரதாபன்.

''குருதேவா! உங்கள் மனைவி வயிற்றில் இருக்கும் குழந்தை உங்கள் வயலில் முன்பு வேலை செய்து இறந்துபோன குப்பனின் மறுபிறவியாம்!''

குரு திடுக்கிட்டு, ''குப்பனா! அந்த மட்டி ஏன் எனக்குப் பிள்ளையாப் பிறக்க வேண்டும்?'' என்று பதறினார்.

''100 படி நெல் நீங்கள் கடன் தர வேண்டும் என்று யமன் சொன்னார்'' என்ற பிரதாபன் மயக்கமுற்று விழுந்தான். அவன் உயிர் பிரிந்தது.

பார்க்கவர் இந்த ரகசியத்தைத் தான் வெளியிட்டால், தானும் மரணமடையலாம் என்று பயந்து யாரிடமும் இதைக் கூறவில்லை!


வயலில் வேலை செய்பவர்களுக்கு அளக்கச் சொல்லும் நெல்லை மனைவி சரியாக அளப்பதில்லை என்பதை உளவறிந்து தெரிந்துகொண்டார். கடனைச் சுமக்கிறாளே என்று வருந்தினார்.

உரிய காலத்தில் குருபத்தினி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். அதைப் பார்க்கும்போதெல்லாம் அவள் குற்றம் ஞாபகம் வந்ததால் அந்தத் துன்பத்தைப் புண்யாக வசனத்தோடு முடிவுக்குக் கொண்டு வர தீர்மானித்தார் பார்க்கவர்.

குழந்தை பிறந்த பதினோராம் நாள் புண்யாக வசனம் சிறப்பாக நடந்தது. இருநூறு பேருக்கு ஆளுக்கு அரைப்படி நெல் தானம் கொடுக்கச் சொல்லி நூறு படி நெல் அளந்து வைத்தார்.

இதைக் கண்டு தன் தவறை உணர்ந்து குருபத்தினி மனம் திருந்தினாள். முனிவர் மன நிம்மதி பெற்றார்.

குவலயாபீடம் என்ற யானை கண்ணனைக் கொல்வதற்காக ஏவி விடப்பட்டது. கண்ணன் தற்காப்பு கருதி அதனுடன் போரிட்டு அழித்தான். இந்த உண்மையை அடியோடு மறைத்தும் திரித்தும் கம்சன் கதை கட்டி விட்டான். ''பட்டத்து யானையைக் கிருஷ்ணன் கொன்றுவிட்டான்'' என்று குற்றம் சாட்டினான்.



பயத்தில் உயிர்விட்ட கம்சன்!

அதற்கு தண்டனை அளிக்கும் பாவனையில் சாணூரன், முஷ்டிகன் என்ற இரு மல்லர்களை கிருஷ்ணன் - பலராமன் மீது, ஏவி விட்டான். அவர்களும் தோள்களைத் தட்டிக் கொண்டு வந்தார்கள்.

இருவரும் எதிர் எதிர் திசைகளிலிருந்து கண்ணன் - பலராமன்மீது பாய, சிறுவர்கள் தந்திரமாக சட்டென்று விலகிக்கொண்டார்கள். மல்லர்கள் இருவரும் இரு மலைகள் மோதிக் கொள்வது போல ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொண்டு 'தடால்' என்று பெரும் சத்தத்துடன் விழுந்தார்கள். மறுபடி எழுந்து முன்னிலும் அதிக கோபத்துடன் கண்ணன்-பலராமன் மீது தனித்தனியே பாய்ந்தார்கள். சாணூரனுக்கும் பலராமனுக்கும் இடையே கடும் போர் நடந்தது. கண்ணனை முஷ்டிகன் அணுகியபோது அவன் கால் ஒன்றைக் கண்ணன் பற்றி அவனைத் தட்டாமாலை சுழற்றி வீசி எறிந்தான். முடிவில் இரு மல்லர்களும் மடிந்தார்கள்.

கிருஷ்ணன் இனியும் தாமதிக்கக் கூடாது என்று தீர்மானித்து, ஓடிச் சென்று சிம்மாசனப் படிகளில் ஏறினான். கம்சனை இழுத்துக் கீழே தள்ளி அவன் மார்புமீது முழங்காலை ஊன்றி ஓங்கிக் குத்தினான். 'அந்தக் குத்து கம்சன் மீது விழுவதற்கு முன்பே, பயத்திலேயே அவன் செத்துப் போனான்' என்கிறது பாகவதம். கண்ணன் கரத்தால் மடியும் பாக்கியம்கூட அவனுக்குக் கிடைக்கவில்லை!

மக்கள் அனைவரும் கிருஷ்ணன்-பலராமனை கோஷங்கள் எழுப்பி வாழ்த்தினார்கள். ''அக்கிரமம் ஒழிந்தது!'' ''தர்மம் வென்றது!'' என்று கூவி குதூகலித்தார்கள்.

நமக்கு அன்றாட வாழ்க்கையில் பல சோதனைகள் வரும்போதெல்லாம், கடவுளுக்கே பல சந்தர்ப்பங்களில் சோதனைகள் ஏற்பட்டுள்ளன என்பதை நினைத்துப் பார்த்து தைரியம் பெற வேண்டும். பொய்யான குற்றச்சாட்டு மூலம் ஆண்டவனுக்கே அநீதி இழைக்க முற்பட்டான் கம்சன். உத்தமரான ஏசுதான் சிலுவையில் அறையப்பட்டார்! ஆனால் எப்படியும் அதர்மம் அழியும்; தர்மம் ஓங்கும் என்ற நம்பிக்கையுடன் நம் கடமைகளைத் தொடர்ந்து செய்து கொண்டு போக வேண்டும்.

- ஆசிரியர்



உபகரணம் இன்றி

சிறு வயதில் குல்லாய் வியாபாரியும், குரங்குகளும் என்று ஒரு கதை கேட்டிருப்பீர்களே! ஞாபகம் இருக்கிறதா? மரத்தடியில், ஒரு குல்லாய் வியாபாரி தூங்கி விடுவார். எழுந்து பார்த்தால், அவரது மூட்டைக்குள்ளே இருந்த குல்லாய்களை எல்லாம், மரத்தில் உட்கார்ந்திருக்கும் குரங்குகள் எடுத்து, அணிந்து கொண்டு விடும்.

குல்லாய் வியாபாரி ஒரு தந்திரம் செய்வான். தன் தலையில் இருக்கும் குல்லாயைக் கழற்றி, கீழே போட்டுவிட, அதைப் பார்த்த எல்லா குரங்குகளும், தம் தலையிலிருந்து குல்லாய்களைக் கழற்றி கீழே போடும்.

குல்லாய் வியாபாரி, எல்லா குல்லாய்களையும் எடுத்து, மூட்டை கட்டிக் கொண்டு, சந்தோஷமாகச் செல்வான்.

இது பழைய காலத்துக் கதை. ஆனால், இப்போது, கம்ப்யூட்டர் யுகம் அல்லவா?

கதையின் தொடர்ச்சி இதோ!

பழைய குல்லாய் வியாபாரியின் மகன் குல்லாய் மூட்டையை மரத்தடியில் வைத்துவிட்டு, தூங்கி எழுந்து பார்த்தால், குரங்குகளின் தலையில் குல்லாய்கள்.

குல்லாய் வியாபாரிக்கு, தன் அப்பா சொல்லிக் கொடுத்த டெக்னிக் ஞாபகம் வருகிறது.

ஸ்டைலாக, குரங்குகளைப் பார்த்து, ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, தன் தலையில் அணிந்திருக்கும் குல்லாயைக் கழற்றி கீழே போட்டான். எல்லா குரங்குகளும், குல்லாயைக் கழற்றி கீழே எறியப் போகின்றன என்று ஆர்வமாய் எதிர்பார்க்க, அப்போது, ஒரு குட்டிக் குரங்கு, கிடுகிடுவென்று கீழே இறங்கிவந்து, வியாபாரி கீழே எறிந்த குல்லாயை எடுத்து தன் தலையில் அணிந்து கொண்டு, மறுபடியும் மரத்தின் மேலே ஏறிப்போனது.

இது எப்படி நடக்கும் என்கிறீர்களா?

குல்லாய் வியாபாரியின் அப்பாவைப் போலவே, குரங்குக் குட்டியின் அப்பா குரங்கும், குல்லாய் வியாபாரி கதையைக் குட்டிக்குச் சொன்னதால் தான்!



விலங்குகளின் விசித்திரங்கள்!

* முதலைகளால், தமது நாக்கை வாயிலிருந்து வெளியில் நீட்ட முடியாது.
* ஒரு எறும்பினால், தன்னைவிட ஐம்பது மடங்கு எடையைச் சுமந்து கொண்டு போக முடியும்.
* துருவக் கரடிகள்


இடது கைப்பழக்கம் உள்ளவை.

* வண்ணத்துப் பூச்சிகள், தம் கால் பாதங்களால் சுவையை அறிந்து கொள் கின்றன.

* எம்பிக் குதிக்க முடியாத ஒரே மிருகம் யானைதான்.

* ஆஸ்ட்ரிச் பறவையின் மூளையைவிட அதன் கண்கள் உருவத்தில் பெரியவை.

இங்குள்ள சுழன்று... சுழன்று... சுழன்று சென்று நடுவில் உள்ள சிறு வட்டத்தில்



போய் முடியும் வளைந்த கோட்டை உற்றுப் பாருங்கள். ஒரு விஷயம் தெரிகிறதா? இங் குள்ளவை ஒவ்வொன்றும் தனித்தனி வட் டங்கள். ஒன்றுக்கொன்று ஒட்டாதவை. பார்ப்பதற்குத் தோற்றமளிப்பதுபோல ஒரே கோடு இல்லை.

ஒரு புதிர்

இங்கே மூன்று கட்டங்களில் 1 முதல்

1 4 7	2 5	3 6 9 8


9 வரையிலான எண்கள் இடம் பெற்றுள்ளன. எந்த அடிப்படையில் அவை பிரிக்கப்பட்டுள்ளன என்பதைக் கூர்ந்து கண்டுபிடித்து, '0' எந்தக் கட்டத்தில் இடம்பெறும் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்!

விடை : மூன்றாவது கட்டத்தில்தான் 0 இடம் பெற வேண்டும். ஏன்? கவனித்துப் பாருங்கள். முதல் கட்டத்தில் உள்ள எண்கள் வெறும் நேர்க்கோடுகளால் உருவாகிற எண்கள். இரண்டாவது கட்டத்தின் எண்கள் நேர்க்கோடுகள் மற்றும் வளை கோடுகளால் உருவாகிற எண்கள். மூன்றாம் கட்ட எண்கள் வளை கோடுகளால் மட்டுமே உருவானவை. ஆகவே வளைகோட்டினால் உரு வான 0, மூன்றாவது கட் டத்துக்குத்தானே போக வேண்டும்.

இனி, சில ஜோக்குகளைப் பார்க்கலாமா?

எப்படி நீந்துகிறார்?

மூன்று முட்டாள் கள், ஒரு கணக்கு ஆசிரிய ரிடம் கணக்குச் சொல்லித் தரும்படிக்



கேட்டார்கள். அந்த மூன்று பேருடைய அடிப்படை கணித அறிவைப் பரிசோதித்துப் பார்க்க விரும்பினார் ஆசிரியர்.

முதல் ஆசாமியிடம் கேட்டார் : "மூன்றின் மூன்று மடங்கு எவ்வளவு?"

சிறிது நேரம் யோசித்த பின்னர், "முன்னூற்று மூணு" என்றான்.

ஆசிரியர், இரண்டாவது ஆசாமியிடம் அதே கணக்கைக் கேட்டார்.

சற்றும் யோசிக்காமல், "செவ்வாய்க் கிழமை" என்றான்.

மூன்றாவது நபரிடமும் அதே கேள்வி கேட்கப்பட்டது. அவன், "ஒன்பது" என்றதும், ஆசிரியருக்கு ஆச்சரியம்.


இவனாவது சரியாகச் சொன்னானே என்று சந்தோஷப்பட்டு, "ரொம்ப சரி. எப்படி கண்டுபிடித்தாய்?" என்று கேட்டார்.

"என்ன சார்! ரொம்ப சிம்பிள்தானே! முன்னூற்று மூன்றிலிருந்து, செவ்வாய்க் கிழமையைக் கழித்தேன். விடை கிடைத்து விட்டது!" என்றானே பார்க்கலாம்!

* கடலின் ஆழமான பகுதிகளுக்குச் சென்று வருவதற்குச் சிறப்பு பயிற்சி பெற்ற ஒரு இளைஞன், அதற்குரிய உபகரணங்களை அணிந்து கொண்டு, ஆழ் கடலில் இறங்கினான்.

சுமார் நூறு அடி ஆழத்தில், ஒருவன் எந்தவிதமான உபகரணங்களும் இல்லாமல் நீந்திக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் ஆச்சரியம். இருந்தாலும், உபகரணங்களை அகற்றிவிட்டு நீந்துவதற்குப் பயமாக இருந்தது.

மேலும் ஆழத்துக்குச் சென்றான். அங்கே இன்னொருவன், சுழன்று சுழன்று நீந்திக் கொண்டிருந்ததைப் பார்த்ததும், இன்னும் அதிகமான ஆச்சரியம்.



அவன் அருகில் சென்று, பிரத்யேகமான போர்டு ஒன்றில், 'எப்படி நீச்சல் உபகரணமும் இல்லாமல், இவ்வளவு ஆழத்தில் நீந்திக் கொண்டு இருக்கிறீர்கள்?' என எழுதிக் காட்டினான்.

அவன் பதிலுக்கு எழுதிக் காட்டினான். 'நான் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கிறேன். காப்பாற்றுங்கள்.'

- கௌதம் ராம்

கோகுலம் நியூஸ்

சாதனை!

தாயின் கருப்பையில் இருக்கும் போதே இதய வால்வைச் சரி செய்யும் அறுவை சிகிச்சையைச் செய்து சாதனை படைத்திருக்கின்றனர் நியூயார்க் மருத்துவர்கள். இதய அறைகளில் ஒன்றான இரத்தத்தைப் பாய்ச்சும் இடது வென்ட்ரிக்கிளில் உள்ள ஆர்டிக் வால்வு சுருங்கிய நிலையில் இருப்பதை அக்குழந்தை கருப்பையில் இருந்தபோதே சோதனை மூலம் மருத்துவர்கள் கண்டுபிடித்தனர். உடனே அந்த வால்வின் அகலத்தை அதிகப்படுத்த அறுவை சிகிச்சை செய்தனர். அதைச் சரிசெய்யாமல் விட்டிருந்தால் குழந்தை பிறந்த பின் 3 பெரிய அறுவை சிகிச்சைகளைச் செய்திருக்க வேண்டியிருக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

ரயில் எரிப்பு

அயோத்தியிலிருந்து சபர்மதி எக்ஸ்பிரஸ் மூலம் அகமதாபாத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள் கரசேவகர்கள். பஞ்சமஹால் மாவட்டத்திலுள்ள கோத்ரா ரயில் நிலையம் அருகே ரயில் வரும்போது சில வன்முறையாளர்கள் ரயில் பெட்டிகளின் மீது பெட்ரோல் குண்டுகளை வீசினர். இரண்டு ரயில் பெட்டிகள் தீப்பிடித்து எரிந்தன. இதில் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கருகி உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்திருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து குஜராத் மாநிலம் முழுவதும் ஏற்பட்ட வன்முறைகளால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருக்கின்றனர்.

தமிழக முதல்வர்

ஆண்டிபட்டி இடைத் தேர்தலில் அமோகமாக வெற்றி பெற்றார் செல்வி ஜெயலலிதா. இதைத் தொடர்ந்து முதல்வராக இருந்த பன்னீர் செல்வம் ராஜினாமா செய்தார். மார்ச் 2ந் தேதி செல்வி ஜெயலலிதா மூன்றாவது முறையாக முதல்வர் பதவியை ஏற்றுக் கொண்டார்.



உருளைக்கு உரிமை

இந்தியாவில் தயாராகும் பாசுமதி அரிசி, மஞ்சள் மற்றும் வேம்பு ஆகியவற்றுக்கு 'பேடண்ட்' உரிமை கேட்டது அமெரிக்கா. இதனை அடுத்து தற்போது உருளைக் கிழங்குக்கு 'பேடண்ட்' உரிமை கேட்டு விண்ணப்பித்திருக்கிறது பிரிட்டன்.

மறதியா? கவலை வேண்டாம்

பிரிட்டனைச் சேர்ந்த நரம்பியல் நிபுணர் ஒருவர் மறதிக்கான காரணம் என்ன என்பதை ஆராய்ச்சி செய்தார். பலதரப்பட்டவர்களையும் ஆராய்ச்சி செய்ததில் மறதி அதிகம் உள்ளவர்கள் மூளையின் முன்பகுதியை அதிகம் பயன்படுத்துவதில்லை என்பதை அறிந்து கொண்டார். மறதி உடையவர்களிடம் "யாராவது உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொன்னால் அது எது சம்பந்தமான விஷயம், உறுதியான விஷயமா, மேம்போக்கான விஷயமா என்று யோசனை செய்தால் அந்த விஷயமோ, பெயரோ நினைவில் நிற்கும். இதே மாதிரி பயிற்சி செய்தால் ஞாபக சக்தி அதிகரிக்கும்" என்றார் இவர். இதைப் பின்பற்றிய மறதி மன்னர்கள் நல்ல முன்னேற்றம் தெரிந்தது என்கிறார்கள்.



சித்திரபானு வருஷம்!

விஷு ஆண்டு முடிந்து சித்திரபானு பிறக்கிறது. 60 தமிழ் ஆண்டுகளில் 16வது ஆண்டு சித்திரபானு. ஓவியம் போன்ற அழகான சூரியன் என்பது இதன் பொருள். சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் பிறப்பவர்கள் அறிவு, ஆற்றல், அழகுடன் திகழ்வார்கள். இந்த ஆண்டு சித்திரபானு வருஷத்தில் இது மிகவும் விசேஷம்.

ஒருமுறை மஹாவிஷ்ணுவுக்கும் நாரதருக்கும் வாக்குவாதம் நடந்தது. நாரதர் மாயை என்பது கிடையவே கிடையாது என்று வாதிட்டார். மாயையை உணர வைப்பதாகக் கூறி விஷ்ணு, நாரதரைக் குளத்துக்குள் தள்ளி விட்டார். குளத்திலிருந்து எழுந்த நாரதர் பெண்ணாக மாறினார். அந்த அழகிய பெண்ணுக்குத் திருமணமாகி 60 பிள்ளைகள் பிறந்தன. இந்த 60 பிள்ளைகளின் பெயர்கள்தான் 60 தமிழ் ஆண்டு களின் பெயர்களாக வழங்கப்படுகிறது.

நமக்கு ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒருநாள். 60 நாட்கள் கழித்து மாயையை உணர்ந்த பெண் மீண்டும் குளத்தில் மூழ்கி எழும்போது நாரதராக மாறிவிடுகிறார்.

'சித்திரபானிர் சிறக்க மழை மிகுந்து
வித்துள்ளவெல்லாம் விளையுமே'

என்று ஒரு வெண்பா உண்டு. இந்தச் சித்திரபானு ஆண்டில் மழை அதிகம் பெய்து, பயிர்கள் நன்கு செழித்து வளரும்.

சித்திரபானு வருடத்தில் பிறப்பவர் களுக்கு மட்டுமல்ல, எல்லோ ருக்கும் நல்லது நடக்கும். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள்.

அட்டையில்: ஸ்ரீரஞ்சனி
வண்ணப்படம்: ஸ்ரீஹரி

தமிழ் வருஷப் பிறப்பன்று காலையில் விழிக்கும்போது நல்லவற்றைக் காண வேண்டும். எனவே ஒவ்வொரு வீட்டிலும் முதல் நாள் இரவே ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, வாழை போன்ற பழங்கள், நகைகள், பணம், மஞ்சள், குங்குமம், பூ ஆகியவற்றை சுவாமி படத்துக்கு முன்பு வைத்து விடுவார்கள். மறுநாள் விடிந்ததும் நேராகக் கனி, நகை, பணம் நிறைந்த தட்டில் கண் விழிக்க வேண்டும். இப்படி கனி காணுவதால் ஆண்டு முழுவதும் நல்லதாக நடக்கும் என்பது ஐதீகம்.

வருஷப் பிறப்பன்று இனிப்பு, உவர்ப்பு, காரம், துவர்ப்பு, கசப்பு, புளிப்பு என அறு சுவையுடைய பதார்த்தங்களைச் செய்து சாப்பிடுவார்கள். வாழ்க்கை என்பது சந்தோஷம், துக்கம், ஏமாற்றம், கோபம் போன்ற பல்வேறு சுவைகளை உள்ளடக்கியது என்பதைக் குறிக்கும் வகையில் இவை செய்யப்படுகின்றன.


ஓவியப் போட்டி

பஸ் ஸ்டாண்ட் எப்படி இருக்குமென்று உங்களுக்குத் தெரியும். நின்று கொண்டிருக்கும் காலியான பஸ்கள், கூட்டத்தோடு புறப்படும் பஸ்கள், கடைகள், காத்துக் கொண்டிருக்கும் பயணிகள் என ஜேஜே என்று இருக்கும். அந்தக் காட்சியை வண்ணத்தில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முழு முகவரி தரவும்.

கடைசி தேதி 8.4.2002

அதிர்ஷ்ட தொப்பி

கதை: பா. கவிதா,
பன்னிரண்டாம் வகுப்பு, புதுடில்லி.
படம்: மாலா




டேய் பிரபு, நம்ம ராமு தூள் கிளப்பு றானே!
ஆமாம்டா. அவன் டீம் ஜெயிச்சிடும்னு நினைக் கிறேன்.
அன்று மாலை –
என்ன ராமு, சந்தோஷமா இருக்கே?
மாமா... மாமா...
எங்க டீம் ஜெயிச்சுடுச்சு மாமா. நானும் 80 ரன்களை அடிச்சேன். எல்லாம் இந்தத் தொப்பியோட ராசிதான். ரொம்ப தேங்க்ஸ் மாமா...
இந்த வெற்றிக்குக் காரணம் தொப்பியில்லை. நீதான்... உன்னுடைய உழைப்புதான் காரணம்.
அப்ப நீங்க அதிர்ஷ்ட தொப்பின்னு சொன்னீங்களே?
உனக்குத் தன்னம்பிக்கை வர்றதுக்காகச் சொன்னேன். அது சரியா வேலை செய்து விட்டது. எப்பொழுதும் மனம் தளராமல் நம்பிக்கையோடு வேலை செய்தால் வெற்றி தான்!
உண்மைதான் மாமா.

பன்னிரண்டு மாதங்களாகத் தொடர்ந்து வந்த அக்னிக்குஞ்சுகள் தொடர்கதை விறுவிறுப்பாக இருந்தது. அருள்மொழியைப் போல் நானும் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. பரிசு ஜோக்ஸ் பகுதிக்கு நான் பல ஜோக்ஸ்களை அனுப்பினேன். ஆனால் ஒன்றும் பிரசுரமாகவில்லை. எங்கள் பள்ளியில் நடந்த சம்பவங்களைப் படிக்கும் போது பயங்கர சிரிப்பாக வருகிறது. எங்கள் பள்ளியிலும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன.

— எஸ். அமீர்ஜான்,
பதினோராம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி,
நல்லூர்.



சார் தபால்

சமாகவும் சுவையாகவும் இருந்தது. வெள்ளை யானை, உருந்து வடை படக்கதைகளைப் படித்து நன்றாகச் சிரித்தேன்.

— ஆர். பரிமளா,
ஒன்பதாம் வகுப்பு,
திருப்பரங்குன்றம்.

உப்பு நமக்கு எவ்வகையில் பயன்படுகிறது, எங்கிருந்து கிடைக்கிறது, அமெரிக்காவில் வெறும் உப்பினாலேயே அமைக்கப்பட்ட சாலை நியூயார்க்கில் இருக்கிறது என்று பல தகவல்களை எங்களுக்கு வழங்கிய கோகுலத்துக்குப் பாராட்டுகள்.

— ஜி.எம். முருகானந்தம்,
திருவைகாவூர்,
தஞ்சைமாவட்டம்.

ஒரு முறை செல்ல ஆசை!

டாக்டர் பூவண்ணன் எங்களைக் கதையோடு மிகவும் ஒன்றச் செய்து விட்டார். நெடுமாறன், பல்லவி, அருள்மொழி, இளங்கோ ஆகியோருக்கு எங்களின் பாராட்டுகள். கோகுலத்தில் பன்றிக் குட்டிகூட அழகாக இருக்கிறது.

— கே. ராஜலக்ஷ்மி,
பத்தாம் வகுப்பு,
அ.பெ.உ.நி. பள்ளி,
திருச்சி.

'யானை அசைந்து வருகுது' என்ற பாடல் ராகத்துடன் பாட வைத்தது. பாடலுக்கு ஏற்ப வண்ணப் படமும் நன்றாக இருந்தது. என் தம்பி, தங்கைகள் இந்தப் பாடலை எந்நேரமும் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

— ஏ. இருதயராஜ்,
சேலம்.

யானை அசைந்து வருகுது பாடல் என்னை மிகவும் கவர்ந்து விட்டது. ஒரு காகமும் பகல் பொழுதும் என்ற எஸ்கிமோக்களின் கதை வித்தியா

மார்ச் கோகுலம் அட்டை, போஸ்டர் அசத்தல். கேரளாவைப் பற்றிய விஷயங்களைப் படிக்கும் போது அவசியம் அந்தக் கடவுளின் தேசத்திற்கு ஒருமுறை சென்று வர ஆசை ஏற்பட்டது.

— என். இந்திராதேவி, ஒன்பதாம் வகுப்பு,
அ.உ.நி. பள்ளி, காங்கேயம்.

கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது.

சென்ற ஆண்டுக்கான சுழல் கோப்பையை மேலச்சீத்தை பள்ளி பெற்றது என்பது நீங்கள் அறிந்ததுதான். இந்த ஆண்டு நிறைய பள்ளிகள் களத்தில் இறங்கியுள்ளன. உங்கள் பள்ளியும் கோப்பையைப் பெற நீங்கள் செய்ய வேண்டியது - உடனே படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டியதுதான். இன்னும் 9 மாதங்களே உள்ளன.

கிரிக்கெட்

இந்தியா – ஜிம்பாப்வே கிரிக்கெட் அணிகளுக்கு இடையே 2 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. நாக்பூரில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி சிறப்பாக விளையாடி இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. இதில் சச்சின் டெண்டுல்கர் 316 பந்துகளைச் சந்தித்து 176 ரன்களைக் குவித்தார். இந்திய அணியில் சேர்க்கப்பட்டிருக்கும் சஞ்சய் பங்கர் ஆபாரமாக ஆடி தனது 2வது டெஸ்டில் முதல் சதமடித்தார். இந்த டெஸ்டில் 9 விக்கெட்களை வீழ்த்திய கும்ளே ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார். இரண்டாவது இன்னிங்ஸில் 7 ஓவர்கள் பந்து வீசி 4 ரன்களைக் கொடுத்து 4 விக்கெட்களைச் சாய்த்தார் ஹர்பஜன்சிங். டெல்லியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டிலும் இந்தியா வெற்றி பெற்று 2–0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.



• கும்ப்ளே

• ஷேன் வார்ன்



• சஞ்சய் பங்கர்



• ஹர்பஜன்சிங்

சஞ்சய் பங்கர்

ரயில்வே மற்றும் போர்டு பிரசிடென்ட் லெவன் அணியில் ஆல் ரவுண்டராக கலக்கிக் கொண்டிருந்த மஹாராஷ்டிராவைச் சேர்ந்த சஞ்சய் பங்கருக்கு இந்திய அணியில் இடம் கிடைத்ததில் வியப்பேதுமில்லை. "ஆல்ரவுண்டர் இல்லாமல் அல்லல்பட்ட இந்திய அணிக்கு பங்கர் ஒரு பெரிய பலம்" என்கிறார் அவரின் கோச் சுபாஷ் சர்வ்.

நாக்பூரில் நடந்த டெஸ்ட் மேட்சில் ஆறாவது ஆட்டக்காரராக களம் இறங்கி செஞ்சுரி அடித்தது, அவர் வாழ்நாளில் மறக்க முடியாதது.

"அன்று அவன் செஞ்சுரி அடித்து தன்னை நிருபித்திருக்காவிட்டால் அவன் எதிர்காலமே கேள்விக்குறியாகி இருக்கும். பந்துவீச்சில் அவன் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்" என்கிறார் அவரின் கோச்.

இருபத்தி ஒன்பது வயதான சஞ்சயின் ஆசை, ஒருதினப் போட்டிகளில் நல்ல ஆல்ரவுண்டர் ஆக வேண்டும் என்பதுதான்.

தொடரை வென்றது இந்தியா!

ஷேன் வார்ன்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென்னாப்பிரிக்காவில் தென்னாப்பிரிக்க கிரிக்கெட் அணியுடன் டெஸ்ட் போட்டிகளை விளையாடியது. இதில் ஆஸ்திரேலியாவின் ஷேன்வார்ன் 434வது விக்கெட்டை வீழ்த்தி கபில்தேவின் டெஸ்ட் சாதனையைச் சமன் செய்தார். தற்போது அதிக விக்கெட்களை (519) வீழ்த்தியவராகத் திகழ்பவர் மேற்கிந்தியத் தீவின் கர்ட்னி வால்ஷ்.



முதல் பரிசு

சி.டி.இலக்கியா,

ஒன்பதாம் வகுப்பு, தூய ஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளி, கோவை.

மார்ச் இதழில் பறவைகளின் அரசனான கழுகை ஓவியப் போட்டியின் தலைப்பாக அறிவித்திருந்தோம். வந்து குவிந்த கழுகுகளில் ஐந்து கழுகுகள் பரிசு பெற்று இங்கு அணிவகுத்துள்ளன.




மூன்றாம் பரிசு

கே.புவனேஷ்

ஏழாம் வகுப்பு, பாஸ்டன் மெட்ரிகுலேஷன் பள்ளி, நந்தனம், சென்னை.

பறவைகளின் அரசன்

ஓவியப் போட்டி முடிவுகள்!



இரண்டாம் பரிசு

டி.ஜி.சிவப்ரியா,
ஐந்தாம் வகுப்பு, மாமல்லன் மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.

ஆறுதல் பரிசு

ஏ.மாரிமுத்து,
ஒன்பதாம் வகுப்பு,
எம்.கே.வி.கே. மெட்ரிக்
பள்ளி, தென்காசி.






ஆறுதல் பரிசு

பி.திவ்யா,
ஆறாம் வகுப்பு,
ஏ.ஜெ.சி. ஆங்கிலப் பள்ளி,
கும்பகோணம்.

குருவிக் குஞ்சின் முதல் அனுபவம்!



வீட்டின் முற்றம். அங்கே கூரையில் குருவியொன்று கூடு கட்டியிருந்தது. அக்கூட்டிலிருந்த குஞ்சுகளில் ஒன்று பறக்கத் தொடங்கியது. வெளியுலகம் அதற்குப் புதிது. ஆகையால் உலகில் உள்ள பொருள்களைக் காணக்காண அதற்கு மகிழ்ச்சி தாளவில்லை. அந்த மகிழ்ச்சியில் பறந்து கொண்டிருந்த அக்குஞ்சு முற்றத்தில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர் பாத்திரத்தின்மீது வந்து உட்கார்ந்து, தண்ணீரைப் பார்த்தது.

தண்ணீரில் தன் உருவம் தெரிவதைக் கண்டதும் வேறொரு குருவி தனக்கு முன்னால் தண்ணீரில் வந்து இருப்பதாகக் கருதி பொறாமை கொண்டு அதைக் கொத்தத் தொடங்கியது.

குருவி தண்ணீரை நோக்கிக் கொத்தியதும் தண்ணீர் கலங்கியது. அவ்வளவுதான், உருவம் மறைந்ததால் தனக்குப் போட்டியாக வந்த குருவி பறந்து போய் விட்டது என்று எண்ணி மகிழ்ந்தது. அந்த மகிழ்ச்சியில் பாத்திரத்தை விட்டு எகிறி குதித்து இங்குமங்கும் பறந்து விளையாடியது.

அப்போது கூடத்தின் பக்கம் தன் பார்வையைச் செலுத்தியது. கூடத்தில் யாரும் இல்லாததால் பயமின்றி பறந்து சென்றது. அங்கே சுவரில் மாட்டப்பட்டிருந்த நிலைக் கண்ணாடியின் மேல் சென்று அமர்ந்தது. அக்கண்ணாடியில் அதன் உருவம் தெரியவே இதற்குமுன் தண்ணீரில் தான் கண்ட குருவிதான் இங்கும் வந்துவிட்டது என்று எண்ணி, விடக்கூடாது என்று நினைத்து அதைத் துரத்தத் தன் அலகால் கொத்தியது. ஆனால் தண்ணீரைப் போல் கண்ணாடி ஆகாததால், அவ்வுருவமும் குருவி செய்ததுபோல கொத்தத் தொடங்கியது.

இந்த உண்மையை அறியாத குருவிக் குஞ்சு பதிலுக்குப் பதில் என்ற விதத்தில் கொத்தியது. அதுவும் பதிலுக்குச் செய்வதைக் கண்டு மேலும் ஆத்திரம் கொண்டு கொத்த, நிழற்குருவியும் அவ்வாறே செய்தது.

தன் அலகு வலிக்கக் கொத்தியும் தன் எதிரி பயப்படாமல் இருப்பதைக் கண்டு அதற்கு ஆத்திரம் மேலிட்டு அழத் தொடங்கியது.

குருவிக் குஞ்சின் அழு குரல் கேட்டு தாய்க்குருவி ஓடி வந்து, "குழந்தாய் ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது. குஞ்சோ தாயைக் கண்டபின் மேலும் அழத் தொடங்கியது.

தாய்ப் பறவை தன் பிள்ளையை ஓரளவு சமாதானம் செய்தபின் குஞ்சு நடந்ததை எடுத்துக் கூறியது. இதைக் கேட்டதும் தாய்க்குருவி 'கப, கப'வென்று சிரித்தது.

தாய் சிரிப்பதைக் கண்டு குஞ்சிற்கு ஒன்றும் புரியவில்லை. தாய்ப்பறவை தன் குஞ்சிற்கு அதன் எதிரி அதன் நிழல் என்பதைக் கண்ணாடி முன்நின்று விளக்கியது.

தாய் விளக்கிக் காட்டியபின் புரிந்து கொண்ட குஞ்சு, "ஆமாம், இதை நான் முதலில் அறியாமல் போனேனே. என்னே மடத்தனம்!" என்று தன்னைத்தானே நொந்து கொண்டது.

அப்போது, தாய்ப்பறவை, "நீ ஏமாந்தது ஒன்றும் புதிது அல்ல! ஆறறிவு படைத்தோம் என்று கர்வப்படுகிறார்களே மனிதர்கள்; அவர்களும் இப்படித்தான் முதலில் ஏமாந்து போய் உள்ளார்கள்!" என்று சமாதானம் கூறியது.

இதைக் கேட்டதும் குஞ்சு, "அப்படியா! ஏமாறுவது உலகில் இயல்புதானா! அப்படியானால் நான் ஏமாந்தது பரவாயில்லை என்றாலும் இனி நான் ஏமாறமாட்டேன்" என்று கூறியபடி பறந்தது.

- முத்து எத்திராசன், சென்னை

ஆஹா ஐஸ்க்ரீம்!

கோடை வெயிலின் கடுமையான தாக்கத்தில் 'ஐஸ்க்ரீம்' என்ற வார்த்தையைக் கேட்டாலே மனமெல்லாம் ஜில்லென்று சந்தோஷமாகி விடுகிறதல்லவா? இந்த ஐஸ்க்ரீம் தோன்றியது எப்படி?


பல நூற்றாண்டுகளுக்கு முன் இங்கிலாந்தை ஆண்ட முதலாம் சார்லஸ் தம் நண்பர்களுக்கு வித்தியாசமான உணவைத் தயாரித்து வழங்குமாறு சமையல்காரர் டிமிர் கோவிடம் கேட்டுக் கொண்டார். அவரும் குளிர்ச்சியான, சுவையான உணவை வழங்கினார். இது அனைவருக்கும் மிகவும் பிடித்துப் போனது. மன்னர் சார்லஸ் இதன் செய்முறையை ரகசியமாகப் பாதுகாக்கும்படி டிமிர்கோவைக் கேட்டுக் கொண்டார். மன்னரின் மறைவுக்குப் பின்னரே குளிர்ச்சியான அந்த உணவின் ரகசியம் வெளி உலகுக்கு தெரியவந்தது.

200 ஆண்டுகளுக்கு முன்பு முறையான ஐஸ்க்ரீம் ஐரோப்பாவில் செய்யப்பட்டு, அங்கிருந்து இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குப் பரவியது.

அமெரிக்காவில் வியாபார ரீதியாக 1851ல் 'பால்டிமோர் மேரிலேண்ட்' என்ற இடத்தில் ஜேக்கப் ஃபஸ்ஸல் என்பவர் ஐஸ்க்ரீம் விற்பனையைத் தொடங்கினார்.

1975ஆம் ஆண்டில் ஐஸ்க்ரீம் இந்தியாவில் அறிமுகமானது. இன்று உலகெங்கும் உள்ள மக்கள் அனைவரும் ஐஸ்க்ரீமை விரும்பிச் சுவைக்கின்றனர்.

ஐஸ்க்ரீமில் உடலுக்குத் தேவையான சத்துகள் நிறைந்துள்ளன. இன்று பல்வேறு சுவைகளில், வண்ணங்களில், வடிவங்களில் ஐஸ்க்ரீம்கள் வலம் வருகின்றன. அருண் ஐஸ்க்ரீம் இந்தக் கோடையில் புதிதாக 'ஜுனோ' என்ற பெயரில் குழந்தைகளுக்குப் 11 வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. குளிர்ச்சியை அனுபவியுங்கள். விடுமுறையைக் கொண்டாடுங்கள்.



செய்து பாருங்கள்!

நாணயம் எங்கே?




உங்கள் கண் முன்னாலேயே உங்கள் கையிலிருக்கும் நாணயம் காணாமல் போகப் போகிறது. எப்படி என்று பார்க்கலாம்!

எப்படி செய்வது?

1. கண்ணாடி டம்ளரில் தண்ணீரை எடுத்துக் கொள்ளுங்கள்.
2. உள்ளங்கையின் நடுவில் நாணயத்தை வைத்து விடுங்கள்.
3. இந்த நாணயத்தின் மேல் தண்ணீர் நிரம்பிய டம்ளரை வைத்து விடுங்கள். டம்ளரின் மேற்புறத்தை இன்னொரு கையால் மூடுங்கள். டம்ளரின் பக்கவாட்டில் இருந்து பார்க்கும்போது நாணயம் தெரிகிறதா? என்ன, காணாமல் போய்விட்டதா?

பென்சில் ட்ரிக்

தண்ணீர் நிரம்பிய கண்ணாடி டம்ளருக்குள் ஒரு முழு பென்சிலை உள்ளே விடுங்கள். டம்ளரின் பக்கவாட்டில் இருந்து பார்க்கும்போது பென்சில் எப்படி தெரிகிறது? முழுமையான பென்சில் உடைந்தது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறதல்லவா?





காரணம் என்ன?

சுத்தமான தண்ணீரின் மூலம் நாணயத்தைப் பார்க்கும்போது உருவம் சற்று வித்தியாசமாக இருந்தாலும் கண்களுக்குப் புலப்படுகிறது. அதுவே சற்று கோணம் மாறி மேற்புறம் கையால் மறைத்தவுடன் நாணயத்தின் பிம்பத்தை நம்மால் பார்க்க முடியவில்லை. அதேபோல் முழுமையான பென்சில் தண்ணீர் மற்றும் கண்ணாடி வழியே பார்க்கும்போது இடம் மாறிய தோற்றத்தைப் பிரதிபலிக்கிறது. எனவே பென்சில் உடைந்தது போல் காட்சியளிக்கிறது.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-


ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடை : 1. வீரரின் முடி. 2. பனியன். 3. தந்தம். 4.யானை மேல் உள்ள துணி டிசைன் 5. கால் நகம்


இரண்டு தீக்குச்சிகளை ஏழாக மாற்றுங்கள்!



விடை :

வண்ணம் தீட்டுங்கள்





''உங்க பத்திரிகையில வர்ற ஜோக் எதுவுமே சிரிக்கிற மாதிரி இல்லையே!''

''ஜோக் எப்படிங்க சிரிக்கும்? நாமதான் சிரிக்கணும்!''

- எம்.வினோத், விருத்தாசலம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka